பக்கங்கள்: 20

# தீம்புனல்
THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 03 புனல்:25 14.10.2023 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054



அரசியல் கட்சிகளின் பிடியில் சிக்கித்தவிக்கும் ஹர்த்தால்

கருணாகரன்

பக்கம் 06



காஸாவை முடக்கியது இஸ்ரேல்

பக்கம் 10

# கப்பல் சேவை இன்று ஆரம்பம்

காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டனத்துக்கும் இடையிலான கப்பல் சேவை இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. செரியாபாணி என்ற பெயரைக்கொண்ட பயணிகள் கப்பல் சேவையின் பரீட்சார்த்த ஓட்டம் கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

குளிரூட்டப்பட்ட இக்கப்பலில் 150 பேர் பயணம் செய்ய முடியும். இரு வழி பயணக் கட்டணமாக 53,500 ரூபாயும் ஒரு வழி பயணக் கட்டணமாக 27,000 ரூபாயும் அறவிடப்படவுள்ளது. ஒரு பயணி, கப்பல் பயணத்தின் போது தன்னுடன் 50 கிலோ எடையிலான பொருட்களை மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார். அதில் 20 கிலோவை பயணி தன்னுடன் வைத்துக் கொள்ளும் படியாகவும் 30 கிலோ கப்பலில் வைக்கக்கூடிய பை என இரண்டாகப் பிரித்து வைத்திருக்க வேண்டும்.

விமான நிலையத்தில் பயணிகளின் உடமைகள் எப்படி சுங்கத்துறையினரின் ஆய்வுக்கு உட்படுத்தப்படுமோ அதே போல் கப்பல் பயணத்தின் போதும் ஆய்விற்குட்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் சேவையின் மூலம் காங்கேசன்துறையில் இருந்து 3 மணி நேரத்தில் நாகபட்டனம் சென்றடையலாம். நான்கு தசாப்தத்தின் பின்னர் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பமாக உள்ளது. 2011 ஆம் ஆண்டு இலங்கையும், இந்தியாவும் கடல் வழியான பயணிகள் போக்குவரத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. காலநிலை சீராக இல்லை என்றால் நேரம் மாற்றியமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ■



தீம்புனல் THEEMPUNAL

# மத்தியகிழக்கில் மீண்டும் இரத்த வரலாறு

இஸ்ரேல் மீது கடந்த சனிக்கிழமை ஹமாஸ் அமைப்பினர் நடத்திய அதிரடித் தாக்குதல் உலகையே அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

இரண்டு மணித்தியாலங்களில் சுமார் 5,000 ஏவுகணைகள் இஸ்ரேல் மீது வீசப்பட்டன. இப்படியான ஒரு மூர்க்கமான தாக்குதல் இஸ்ரேல் மீது தொடுக்கப்படவில்லை. இரண்டு மணித்தியாலங்கள் இஸ்ரேல் நிலை குலைந்தது.

பாலஸ்தீன போராளிகளின் தாக்குதலில் இருந்து பாதுக்காப்பதற்காக "அயன் டேம்" எனும் தொழில்நுட்பத்தை இஸ்ரேல் பொருத்தியுள்ளது. ஏவுகணை போன்றவற்றைக் கண்டறிந்து அழிக்கும் வல்லமை வாய்ந்தது அயன் டேம் தொழில்நுட்பம். அதனையும் மீறி தரை, கடல், ஆகாயம் மார்க்கமாக இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் அமைப்பினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

பாலஸ்தீனத்தை சேர்ந்த ஹமாஸ் குழு, இஸ்ரேலின் தெற்கு பகுதியில் தாக்குதல் நடத்தி இருப்பது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. தாக்குதல் நடத்திய ஒரு சில மணி நேரங்களிலேயே போரை தொடங்கியுள்ளதாகவும் அதில் வெற்றி பெறுவோம் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார். இஸ்ரேல் மீது ஹமாஸ் படை ரொக்கெட் தாக்குதல் நடத்தியது. அதற்கு பதிலடி அளிக்கும் விதமாக காசாவில் உள்ள ஹமாஸ் படை மீது தாக்குதல் நடத்துவோம் என இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

ஒபரேஷன் அல்-அக்ஸா ஸ்டார்ம் என்ற பெயரில் தாக்குதலை தொடங்கியுள்ளதாக ஹமாஸ் ரகசிய ராணுவக் குழுவின் தலைவர் முகமது டெய்ஃப் தெரிவித்துள்ளார். ஆயுதங்களை எடுத்துக் கொண்டு போரிடுமாறு இஸ்ரேல் நாட்டில் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அப்படிப்பட்ட வீடியோ ஒன்றை ஸ்டெ ரோட் நகரில் வசிப்பவர் ஒருவர் எடுத்துள்ளார். எக்ஸ் வலைதளத்தில் உலா வரும் அந்த வீடியோவில் தெருக்களில் செல்லும் அப்பாவி மக்கள் மீது ஹமாஸ் அமைப்பினர் சுடுவது பதிவாகியுள்ளது.

தன்னுடைய வீட்டின் மொட்டை மாடியில் இருந்து கொண்டு ஒரு நபர், அந்த சம்பவத்தை வீடியோவாக எடுக்கிறார். பின்னர், வீடியோ எடுக்கும் நபரை நோக்கி ஹமாஸ் அமைப்பினர் துப்பாக்கியை திருப்புகின்றனர். சுதாரித்துக் கொண்டு அந்த நபர் பாதுகாப்பை தேடி ஓடுகிறார். இந்த வீடியோவை சர்வதேச மனித உரிமை வழக்கறிஞர் ஆர்சன் ஆஸ்ட்ரோவ்ஸ்கி, எக்ஸ் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். இதே போன்று, காசாவில் எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் வீடியோக்களும் சமூக வலைதளங்களில் உலா வருகிறது. அதில், இஸ்ரேல் இராணுவ வீரர்களின் உடல்களை சாலைகளுக்கு இழுத்து வந்த தீவிரவாதிகள் கொண்டாட்டத்தில் ஈடுபடுவது பதிவாகியுள்ளது.

காசாவை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேல் இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என காசாவை ஆட்சி செய்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கூறி வருகின்றனர். பாலஸ்தீனியர்களுக்கு எதிராக இஸ்ரேல் குற்றத்தில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பாக, இஸ்லாமியர்களின் புனித தளமாக கருதப்படும் ஜெருசலேத்தில் உள்ள அல் அக்சாவை இழிவுபடுத்தி வருவதாகவும் குற்றஞ்சாட்டி வருகிறது.

இஸ்ரேல்மீதான ஹமாஸ் தாக்குதலில் லீ சசி என்ற பெண் 7 மணி நேரம் உயிரிழந்தோரின் உடல்களுக்கு நடுவில் பதுங்கியிருந்து உயிர் பிழைத்துள்ளார். இது தொடர்பான வீடியோ கிர்த்சக் கட்மோனிடம் இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார். அதில் அவர் எப்படி தப்பித்தார் என்றும் அதற்கு ஆதாரமாக வீடியோ ஒன்றும் அனுப்பியுள்ளார். இந்த வீடியோ தற்போது இணையவாசிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது

இந்தத் தாக்குதலில் 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும் 1,610 பேர் காயம் அடைந்துள்ளதாகவும் பாலஸ்தீன சுகாதாரத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. அதே சமயம், இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதலில் 100 பேர் உயிரிழந்தனர்.

காசா எல்லைப்பகுதியில் போடப்பட்டிருந்த உச்சக்கட்ட பாதுகாப்பை மீறி காசாவில் இருந்து 10க்கும் மேற்பட்ட பாலஸ்தீன போராளிகள் இஸ்ரேலுக்குள் நுழைந்துள்ளதாக இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் தகவல் தெரிவித்துள்ளார்.

கடல் வழியாக இஸ்ரேலுக்குள் நுழைய முயற்சித்த பாலஸ்தீனியர்களை படுகொலை செய்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது. இதற்கிடையே, இஸ்ரேலியர்கள் பலரை பிணை கைதியாக பிடித்து வைத்துள்ளதாக ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர் அல் - அரூரி தெரிவித்துள்ளார். சிறையில் உள்ள பாலஸ்தீனிய கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலின் பாதுகாப்பு வீரர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பேரை சுட்டுக் கொன்றனர். இந்த நிலையில், போர் தொடுக்கப்பட்டதாக அறிவித்த இஸ்ரேல் ஹமாஸ் குழு மீது பதில் தாக்குதல் நடத்தியது.

வான் வழி மற்றும் தரை வழி என தொடர் தாக்குதலை ஹமாஸ் மீது இஸ்ரேல் நடத்தி வருகிறது. காசாவை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாக இஸ்ரேல் அறிவித்தது.

வாழும் அரபு மக்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். இதில் கவனிக்க வேண்டிய விஷயம், இஸ்ரேலில் வாழும் 20 சதவிகித மக்கள் அரபு மக்கள் ஆவர்.

"எதிரிக்கு அவரது காலம் முடிந்து விட்டது என்பதை புரிய வைக்கும் நாள் இது. துப்பாக்கி வைத்திருக்கும் அனை வரும் அதை வெளியே எடுக்க வேண்டும். நேரம் வந்துவிட்டது" என முகமது டெய்ஃப் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தலைநகர் ஜெருசலேத்தில் உள்ள அல் அக்ஸா மசூதியை அடையாளம் தெரியாத இஸ்ரேலியர்கள் சேதப்படுத்தியதே ஹமாஸ் படைத் தாக்குதல் நடத்த காரணமாக அமைந்தது என முகமது டெய்ஃப் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த மசூதி, இஸ்லாமியர்களின் புனிதத் தளமாக கருதப்படுகிறது. இஸ்லாமியர்களுக்கு மட்டும் இன்றி யூதர்களுக்கும் புனிதத் தளமாக கருதப்படுகிறது. இந்த குறிப்பிட்ட பகுதிதான், பல ஆண்டுகாலமாக சர்ச்சைக்குரிய பகுதியாக உள்ளது.

காசா - இஸ்ரேல் எல்லை பகுதியில் கடந்த சில வாரங்களாகவே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இஸ்ரேல் மீது பாலஸ்தீனியர்கள் பலூன் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கு பதிலடி அளிக்கும் விதமாக வான்படை தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் நடத்தி வருகிறது. ஆனால், இது பெரிய பிரச்சினையாக வெடிக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படாமல் இருந்தது. இச்சூழலில்தான், அல் அக்ஸா மசூதி சேதப்படுத்தப்பட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட வெஸ்ட் பேங்கில் பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. முன்னெப்போதும் நடைபெறாத அளவுக்கு இஸ்ரேலுக்குள் பாலஸ்தீனியர்கள் நுழைந்துள்ளனர். இது தொடர்பான ஒன்று தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. கடந்த சனிக்கிழமையன்று இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயிரக்கணக்கான ஏவுகணைகளை ஏவி







தாக்குதலை தொடங்கியது. பல ஆண்டு காலமாக இஸ்ரேல் பாலஸ்தீன் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது. இது இஸ்ரேல் தனி நாடாக உருவானதில் இருந்து இந்த பிரச்சனை இருந்து வருகிறது. இஸ்ரேலுடன் பலமுறை போரிட்ட பாலஸ்தீன போராளிக் குழுவான ஹமாஸ் காஸாவை ஆட்சி செய்து வருகிறது. இந்நிலையில்தான் கடந்த சனிக்கிழமை போர் தொடங்கியது.

லீ சசி என்ற பெண் 7 மணி நேரம் உயிரிழந்தோரின் உடல்களுக்கு மத்தியில் பத்ங்கியிருந்து உயிர் தப்பியுள்ளார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. லீ சசி மற்றும் அவருடன் சேர்ந்து 35 பேர் வெடிகுண்டு புகலிடம் ஒன்றில் தாக்குதலில் இருந்து பாதுகாப்பாக இருக்க பதுங்கியுள்ளனர். ஆனால் அவர்கள் ஜமாஸ் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டனர். அப்போது அவர்களை நோக்கி சரமாரியாக ஹமாஸ் குழுவினர் தாக்குதல் நடத்தினர். அவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டதில் பலரும் உயிரிழந்தனர். ஆனால் லீ சசி அதிர்ஷ்டவசமாக தப்பியுள்ளார். அவர் உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு நடுவில் சுமார் 7 மணி நேரம் மறைந்து இருந்துள்ளார்.

35 பேரில் வெறும் 10 பேர் மட்டுமே உயிர் தப்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான வீடியோவை தனது தோழி நடாஷா ரகேல்

இந்த நிலையில், இஸ்ரேல் நிதியமைச்சர் ஜாவத் அபு ஷமால்லாவை விமான நிலைய தாக்குதலில் சுட்டுக் கொலை செய்ததாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது. ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இது வரை 900 இஸ்ரேலியர்கள் உயிரிழந்துள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தங்களது அதிகாரப்பூர்வ எக்ஸ் பக்கத்தில் தகவல் தெரிவித்துள்ளது. மேலும், அவர்களது எக்ஸ் பக்கத்தில் டெல் அவிவ், பெர் ஷேவாவில் சைரன் ஒலிக்கிறது என்றும் பதிவிட்டுள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் எதிரொலியாக சர்வதேச சந்தையில் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 5% அதிகரித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் படை இடையேயான போர் சர்வதேச அளவில் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. இரு படை பிரிவுகளிலும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இஸ்ரேலின் பல்வேறு பகுதிகளில் ஹமாஸ் படையினர் 5000 ற்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்த போர் எதிரொலியாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் 5% உயர்ந்துள்ளது. அக்டோபர் 6 ஆம் திகதி 84.58 டொலராக இருந்த பிரெண்ட் கச்சா எண்ணெய் கடந்த வியாழக்கிழமை 89 டொலாராக உயர்ந்துள்ளது.

இஸ்ரேல் மீதான தாக்குதலின் பின்னணியில் வேறு நாடுகள் இருப்பதாக இஸ்ரேல் குற்றம் ச்கமாஸின் கொட்டத்தை அடக்கிவிட்டு அந்த நாடுகளை நோக்கி இஸ்ரேலின் ஆயுதம் நீளும் அப்போது இன்னொரு யுத்தத்தின் ஆரம்பமாகவும் இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
news@theempunal.com
தீம்புனல் THEEMPUNAL

# அதிகார ஆசையால் அல்லல்படும்
# நிறைவேற்று அதிகாரம்

ஜனாதிபதியின் கைவசம் உள்ள நிறைவேற்று அதிகாரத்தை அழித்து ஒழிக்க வேண்டும் என்ற சபதத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்கள் பதவியைக் கையில் எடுத்ததும் அதைக் கெட்டியாகப் பற்றிப் பிடித்து விடுவர். சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி என்பது சர்வாதிகார ஆட்சி போன்றதே.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தகவல் பரவியுள்ளது.

எந்தவொரு வேட்பாளரும் அல்லது அரசியல் கட்சியும் தேர்தலில் 50 சதவீத வெற்றியைப் பெற முடியாது என ஆய்வுகள் சொல்வதால் இலங்கையின் அரசியல் வட்டாரத்தில் குழப்பநிலை தோன்றியுள்ளது.

ஜனாதிபதி ரணில் இது தொடர்பாக கலந்துரையாடியதாகவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஏற்கெனவே தேர்தல் முறைமையை மாற்றுவதற்கான அமைச்சரவைத் பத்திரத்தை தயாரித்துள்ளதாகவும் செய்தி வெளியாகி உள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரமானது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டுமா? மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமரைக் கொண்டு பாராளுமன்றம் மேலும் பலப்படுத்தப்பட வேண்டுமா? என்பதை அறிய பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு வழி வகுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகும்.

நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என பாராளுமன்றத்திலும் வெளியேயும் பேசிவரும் அரசியல்வாதிகள் அதனை ஒழிப்பதற்குத் தயாராக இல்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்று பட்டிதொட்டியெல்லாம் பரப்புரை செய்யும் மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி) இந்த நடவடிக்கையைப் பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தவுடன் எதிர்க்கும் என்று தெரிகிறது. 2025 பொதுத் தேர்தலுக்குப் பிறகு புதிய அரசாங்கம் உள்ளது. "அடுத்த அரசாங்கம் மக்களின் ஆணையுடன் வரும், அதனால் அதுவரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் எங்களால் தீர்மானிக்க முடியாது அதற்கு முன் எடுக்கும் எந்த முயற்சியும் வெற்றியடையாது" என ஜே.வி.பியின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சியும் இந்த விவகாரத்தில் பின்னடிக்கிறது.


இதற்கிடையில், தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் வந்தவுடன், அரசியல் சூழல் சரியாக அமையும் பட்சத்தில், ஜனாதிபதியுடன் பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்க உயர் வட்டாரங்களில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என, மூத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். சட்டப்படி பொது வாக்கெடுப்புக்கு ஜனாதிபதி மட்டுமே அழைப்பு விடுக்க முடியும்.

சர்வஜன வாக்கெடுப்பு முடிவுகளின் அடிப்படையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு இந்த விடயம் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்படும். இது நடந்தால், 2024 நவம்பரில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தல், சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டால் ஒத்திவைக்கப்படலாம்.

கடந்த ஆண்டு நாடு தழுவிய போராட்டங்களில் வெடித்த பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் அல்லது பாராளுமன்றத் தேர்தலில் எந்த அரசியல் கட்சியும் 50 சதவீதத்துக்கு மேல் வெற்றி பெறுவது சாத்தியமில்லை. நசீர் அஹமட் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகி அரசாங்கத்தில் சுற்றாடல் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டதையடுத்து, அவரை நீக்குமாறு உச்ச நீதிமன்றம் அண்மையில் வழங்கிய வரலாற்றுத் தீர்ப்பை அடுத்து, அரசாங்கத்தில் இருந்து விலகியவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகி வருவதாக செய்தி வெளியாகி உள்ளது. இதனால் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆசனங்களை இழக்க நேரிடும்.

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் மிக முக்கியமான வருடங்களாக இருக்கும் நிலையில் எதிர்வரும் மாதங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுமா? என அரசியல் வட்டாரங்களில் பரவி வரும் தகவல்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். காலம்தான் பதில் சொல்லும். ■

# இலங்கையில் தீவிரமடையும் கண் நோய்



உலகப் பார்வையிழப்பு தடுப்பு அமைப்பு மற்றும் உலக சுகாதார நிறுவனம் இணைந்து, ஒக்ரோபர் 12 ஆம் திகதியை 'உலகப் பார்வை தினம்' என கடைப்பிடித்து வருகிறது. இந்நாளில், நம் கண்களைக் காதலிப்போம் என்ற இலக்குடன் பணியாற்றும் இடத்தில் ஏற்படும் பார்வை இழப்பு பற்றியும் அவற்றைத் தடுப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் இந்த ஆண்டின் இலக்கு.

இலங்கையில் பல பகுதிகளில் 'கான்ஜூன்க்டிவிடிஸ்' எனப்படும் கண் தொற்று வேகமாகப் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபரின் கண்ணீர் மற்றும் தொடர்புடைய சுரப்புகளால் இந்த நோய் பெரும்பாலும் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுகிறது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த நோய் ஏற்பட்டு விட்டால் ஒரு சில அறிகுறிகள் உடல் ரீதியாக ஏற்படும். இரண்டு கண்களிலும் சிவத்தல், கண்களில் அரிப்பு, அதிகரித்த கண்ணீர் உற்பத்தி, தலைவலி, ஒளியின் உணர்திறன் மற்றும் வறண்ட கண்கள் போன்ற அறிகுறிகள் காணப்படும்.

இதனால், நோய்த் தொற்று அபாயத்தைக் குறைக்கும் வகையில், தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**என்ன செய்ய வேண்டும்?**

பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் போது கைகளைத் தண்ணீரால் அடிக்கடி கழுவுதல், கை சுத்திகரிப்புகளைப் பயன்படுத்துதல் போன்ற தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் நோய் பரவுவதைக் குறைக்க முடியும் என தெரிவித்துள்ளார்கள்.

மேலும், கண் தொற்று ஆரோக்கியத்திற்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது மற்றும் 3 முதல் 4 நாட்களுக்குள் சரியாக வாய்ப்புள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பல பகுதிகளில், பள்ளிகள் மூடப்படுவதற்கும் பள்ளித் தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதற்கும் வழிவகுக்கும், கண் தொற்று பரவுவதற்கு எதிராகக் குழந்தைகள் மற்றும் பெரியவர்களை சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணம், காலி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் சிறுவர் மற்றும் வயது வந்தோர் கண் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். தொற்றுப் பரவல் காரணமாகப் பாடசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அதேவேளை, நோய் பரவுவதைத் தடுக்கும் முயற்சியில் பாடசாலைகளினால் நடத்தப்படும் தரப்பரீட்சைகள் இரத்துச் செய்யப்பட்டமையும் காலியில் இருந்து பதிவாகியுள்ளது.

லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவர் டாக்டர் தீபால் பெரேராவைத் தொடர்பு கொண்ட போது, கண்கள் சிவத்தல், வலி மற்றும் கண்களில் இருந்து கண்ணீர் வெளியேற்றம் மற்றும் மங்கலான பார்வை ஆகியவை நோய்த்தொற்றின் அறிகுறிகளாகும்.

இந்த நோய் சுவாச வைரஸ் தொற்றுடன் தொடர்புடையதாக இருக்கலாம். கண் தொற்று சுமார் நான்கு முதல் ஐந்து நாட்கள் வரை நீடிக்கும் என்று அவர் கூறினார்.

எவ்வாறாயினும், பொது இடங்கள் மற்றும் போக்குவரத்துச் சேவைகளுக்குச் செல்லும் போது, நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட சிலர் தங்கள் கண்களைத் தொட்டு, ஒருவர் தொடும் அல்லது பிடிக்கக்கூடிய பரப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தொட்டிருக்கலாம். அந்தப் பகுதிகளில் இருக்கும் போது தொற்று அவ்வப்போது காணப்படுவதால், பீதி அடையத் தேவையில்லை என்று குழந்தை நல மருத்துவர் மேலும் கூறினார்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இந்த நாட்களில் கண் நோய் பரவி வருவதாகவும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் வேகமாகப் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் கடும் காற்றுடனான காலநிலை காரணமாக கண் நோய் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடமராட்சி, வலிகாமப் பிரதேச மாணவர்கள் மத்தியில் இந்தக் கண் நோய் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

கண் கடுமையாக சிவப்படைந்து, கண்ணில் பீழை தள்ளி, கண்ணில் நீர் சொரிவதுடன், சிறியளவிலான வலியும் நோய் அறிகுறிகளாக உள்ளன.

இந்தத் தொற்று நோய் தொடர்பில் அவதானமாக இருப்பதுடன் மேற்கண்ட அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடுமாறு பொது சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளார்கள்.

குறித்த கண்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சுத்தமான கைக்குட்டையினைப் பயன்படுத்துமாறும் வெயில், தூசிகளுக்குள் செல்வதனைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். ■

# ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகும் அரசியல் கட்சிகள்

ஏம்.ஏ.எம்.நிலாம்



பெரும் அரசியல் நெருக்கடிக்கும் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் சிக்குண்டு போயிருக்கும் இலங்கை வரக்கூடிய 2024 ஆம் ஆண்டு தேர்தலுக்கான ஆண்டாக அரசியல் அரங்கில் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. எந்தத் தேர்தல் நடைபெறாது போனாலும் அடுத்த ஆண்டு இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றேயாக வேண்டும். அடுத்த ஆண்டில் நிறை வேற்றதிகார ஜனாதிபதி மக்களாணையுடன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் மக்களாணை அவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தாரைவார்த்துவிட்டுச் சென்றார். எனினும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையுடன் அந்தப் பதவியை ரணில் விக்கிரமசிங்க வகித்துக் கொண்டிருக்கின்றார்.

இன்னும் பத்துமாத காலத்துக்குள் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வ தற்கு ஆரம்பப் பணிகளை அனைத்துக் கட்சிக ளும் முடுக்கிவிட்டிருக்கின்றன. பிரதான கட்சிகள் உட்பட சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகள்கூட அரசியல் அரங்கில் தம்மை நிலைநிறுத்திக் கொள் வதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலை ஒரு ஆயுத மாக பயன்படுத்திக் கொள்வதற்கு திட்டம் வகுத்து மக்கள் மக்கள் முன்செல்ல தம்மை தயார்ப்படுத்தி வருகின்றன. நவம்பரில் சமர்ப்பிக்கப்படவிருக் கும் வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி தேர்த லுக்கான நிதி ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டி ருக்கின்றது.

பிரதான கட்சிகள் சில ஆரம்பப் பிரச்சாரப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளன. இந்தத் தேர்தலானது பலமுனைப் போட்டியாகவே காணப்படலாம். மொட்டுக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் கட்சி(ஜே.வி.பி)யும் வேறு சில பெரும்பான்மைக் கட்சிகளும் சிங்கள பெரும்பான்மை வாக்குவங்கியை இலக்கு வைத்தே வியூகங்களை அமைத்து பிரச்சாரப் பணிகளை முடுக்கிவிட்டிருக்கின்றன. அதேசமயம் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் வாக்கு வங்கியையும் அக்கட்சிகள் தமதாக்கிக் கொள்வ தில் முனைப்புக் காட்டினாலும் அந்த வாக்கு வங்கியை பெற்றுக் கொள்வதற்கு தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதிலும் ஆர்வம் காட்டத் தவறவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாகவே இருக்கின்றது.

இந்தத் தேர்தல் களத்தில் பலமுனைப் போட்டியென்று குறிப்பிட்ட போதிலும் முக்கியமாக இதனை மும்முனைப் போட்டியெனக் கொள்வதே நிதர்சனமானதாகும். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி, மொட்டுக் கட்சியை இணைத்துக் கொண்டு பய ணிப்பதை அவதானிக்க முடிகிறது. ஏனெனில் மொட்டுக் கட்சி இதுவரையில் தனித்துப் போட் டியிடுவதை மறைமுகமாக தவிர்த்தே வருகின்றது. அடுத்து தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) தலைவர் அநுரகுமார திசாநாயக்கவும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸவும் நேரடிப் போட்டியாளர்களாகக் காணப்படுகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத் தேர்தலில் நேரடியாக களமிறங்குவதை தவிர்த்தே வருகின்றார். அக்கட்சியின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ஷவுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் கருத்து முரண்பாடு அதிகரித்து இன்று அது விஸ்வரூப மெடுத்துள்ளதால் மொட்டுக் கட்சி தேர்தல் விடயத்தில் தடுமாற்றமடைந்து இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ தனது மகன் நாமலை முன்னுக்குக் கொண்டுவரும் பிரயத்தனத்திலிருக்கிறார். பஷில் அதற்கு கடும் எதிர்ப்பை வெளிக்காட்டி வருகின்றார். இது மொட்டுக் கட்சிக்குள் இருக்கும் பெரும்பாலான எம்.பிக்கள் ரணில் பக்கம் சாரத் தொடங்கியுள்ளனர். எனவே பெரும்பாலும் மொட்டுக் கட்சி, ஐ.தே.கட்சி தரப்பில் ஒரே வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கும் நிலையே காணப்படுகின்றது. ரணிலின் இந்த வியூகம் பௌத்த சிங்கள வாக்கு வங்கியை வென்றெடுப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பிரதிபலிப்பே ஜேர்மனிய ஊடகத்துக்கு ரணில் வழங்கிய பேட்டியாகும். அவரது அந்த ஊடக நேர்காணல் மேற்குலகை சினம்கொள்ள வைத்துள்ளது. தற்போதைய நிலையில் அது குறித்து ரணில் கவலைப்படவில்லை. ரணிலின் இந்த பதிய வியூகம் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்ததாகவே அமையப் பெற்றுள்ளது. ரணிலின் இந்தச் செயற்பாடு இதுவரை காலமும் அவர் கடைப்பிடித்த போக்குக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே காணப்படுகிறது. அவர் தனது வியூகப் பாதையில் தடம் புரண்டிருப்பதையே அவதானிக்க முடிகிறது.



ரணில் விக்கிரமசிங்க கடந்தகால ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிட்டபோதும் அவரால் வெற்றிகொள்ள முடியாது போனது. இந்த நிலை யில் ஆரம்பத்தில் அன்றைய இராணுவ தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக களமிறக்கிய போதும் அதில் அவரால் வெற்றிகொள்ள முடியாது போனது.

அடுத்து 2015 இல் மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டார். அதில் மைத்திரிபால வெற்றியீட்டினார். ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். இடையில் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நிக்கி மஹிந்த ராஜபக்ஷவை மைத்திரிபால சிறிசேன நியமித்ததால் அரசுக்குள் குழப்பநிலை உருவானது. 52 நாள் போராட்டம் இறுதியில் நிதிமன்றத் தீர்ப்பின் மூலம் ரணில் மீண்டும் பிரதமரானார். இதனால் மைத்திரிபால மீதான எதிர்ப்பு வலுவடையத் தொடங்கியது. இந்த முறுகல் 2019 வரை நீடித்தது.

2019 தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டார். ஆனால், மொட்டுக் கட்சி வேட்பாளராக கோட்டபாய ராஜபக்ஷ களமிறங்கினார். பௌத்த சிங்கள இனவாதப் பிரச்சாரங்களால் மக்கள் கவரப்பட்டு 69 இலட்சம் என்ற பெரும் எண்ணிக்கை வாக்குகளால் அவர் வெற்றி பெற்றார். ஆனால், கோட்டபாயாவால் நல்லாட்சியொன்றைக் கொண்டுநடத்த முடியாத நிலை ஏற்பட்டது. சிங்கள மக்களே அவருக்கு எதிராக திரண்டனர். கோட்டா வீட்டுக்குப் போ (Gota go Home) என்ற கோஷத்துடன் அரசியல் போராட்டம் தலை தூக்கியது. ஜனாதிபதி செயலகப்பகுதி முற்றுகையிடப்பட்டது. அரசியலுக்கு முகம் கொடுக்க முடியாமல் கோத்தபாய பதவி விலகினார். அடுத்து இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். அவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையை வெற்றி கொண்டு ஜனாதிபதியாக பதவியைத்த தொடர்கின்றார்.



பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிய நாட்டைப் படிப்படியாகப் சர்வதேச ஒத்துழைப்புடன் மீட்டெடுப்பதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளார். ஆனால், அவரது தாராள வாதச் சிந்தனைப் போக்கு வரவேற்கக் கூடியதாக இருந்த போதும் நாட்டின் பொருளாதாரம் பின்னடைவுக்கே வழி வகுப்பதா கத் தெரிகிறது. உலக நாடுகளின் ஒத்துழைப்பைபெற அவர் பகிரதப் பிரயர்த்தனம் செய்து வரு கின்றார். ஆனால், உள்நாட்டு இன நெருக்கடிக் குத் தீர்வு தேடுவதில் அவர் இன்னமும் பின்தங்கியவராகவே காணப்படுகின்றார். என்னதான் அரசியல் வியூகங்களைக் கையாண்டு தேர்தலொன்றுக்கு முகம்கொடுத்தாலும் பொரும்பாண்மை மக்களின் ஆதரவை அவரால் பெற முடியுமா? என்பது சந்தேகமே.

பெரும்பாண்மை மக்களின் வாக்கு வங்கி சஜித், அநுரகுமார பக்கம் ஓரளவு அதிகரிக்கும் போது சுகந்திரக் கட்சியோடு புதிதாக களமிறங்கத் தொடங்கியுள்ள “தாயக மக்கள் கட்சி” என்ற (மவ்பிம ஜனதா பக்ஷய) திலீத் ஜய வீர தலைமையில் போட்டியிடத் தயாராகி வருகின்றது. இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வியூகம் எந்தளவுக்கு எடுபடப் போகிறது என்பது பெரும் கேள்விக் குறியாகும். இன்று மக்கள் செல்வாக்கு தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி ) பக்கமும் ஐக்கிய மக்கள் சக்திப் பக்கமும் அலை மோதிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# ரணில் சீனாவுக்கு செல்வது ஏன்?

அ.நிக்ஸன்



சீனாவைக் கடந்து இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கும் விடயத்தில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய நாடுகள் முற்படுவதாகத் தெரிகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் உதவிகளை எந்த வழியிலாவது பெறமுற்படுகிறார். அதே நேரம் சீனாவிடமும் இருந்து அதிகளவு நிதியைப் பெறும் முயற்சிகளும் தீவிரமாக இடம்பெறுகின்றன.

அமெரிக்கச் செய்தி ஊடகமான புளும்போர்க் (Bloomperg) தகவலின் பிரகாரம், ரணில் சீனாவிடம் சென்று உதவிகளைப் பெறுவதைவிடவும் அமெரிக்க, பிரான்ஸ், ஜேர்மன் மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து நிதியுதவிகளைப் பெறுவதே மேல் என்ற தொனி தென்படுகின்றது.

இப்பின்னணியோடுதான் ஐ.எம்.எப் எனப்படும் சர்வதேச நாணய நிதியமும் இலங்கைக்கு வழங்கவிருந்த இரண்டாம் கட்ட நிதியுதவிகளை வழங்க முடியாதென அறிவித்திருக்கலாம் என்ற சந்தேகங்கள் ரணில் அரசாங்கத்திடம் மேலோங்கியுள்ளன.

இலங்கைத்தீவு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த ஆண்டு எந்த ஒரு தேர்தலையும் நடத்த முடியாதென அதிகாரபூர்வமற்ற முறையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.எம்.எப் இன் நிதி வழங்கல் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையை அவதானித்தே தேர்தல் பற்றி தற்போதைக்குச் சிந்திக்க முடியாதென்ற கருத்தை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ளது போல் தெரிகிறது.

கொழும்பில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஜே.வி.பி உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடியிருக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் பரிந்துரைகளை அரசியலாக்கி குழப்ப வேண்டாம் என்றும், கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குரிய பொதுப் பொறிமுறை ஒன்றை வகுத்துச் செயற்பட வேண்டுமெனவும் ஐ.எம்.எப் பிரதிநிதிகள் கேட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக அதிகாரபூர்வமாக ஐக்கிய மக்கள் சக்தியும் ஐ.எம்.எப் உம் எதுவுமே கூறவில்லை. சந்திப்பு இடம்பெற்றதாக மாத்திரமே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.எம்.எப். உடனான சந்திப்பில் ரணில் அரசாங்கம் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியதுடன் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என ஐ.எம்.எப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்ததாகச் சஜித் பிரேமதாச கூறியிருக்கிறார்.

அதாவது, நிலையான அரசாங்கம் ஒன்று அமைய வேண்டிய அவசியத்தை சஜித் வலியுறுத்தியிருக்கிறார். சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டங்களை ஜே.வி.பியும் மறுக்கவில்லை. ஆனால், பரிந்துரைகளைச் செயற்படுத்த நிலையான அரசாங்கம் தேவை என்று ஜே.வி.பி சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஐ.எம்.எப் பிரதிநிதிகளைப் பொறுத்தவரை உள்ளூர்க்கட்சி அரசியல் போட்டிகளுக்கு இடமளியாமல் பொருளாதார மீட்சிக்கான பொதுப் பொறிமுறை பற்றியே அதிகளவு கவனம் செலுத்தியிருக்கின்றனர்.

குறிப்பாக தமது பரிந்துரைகளை எதிர்க்கட்சிகள் அரசியலாக்கக் கூடாது என்பது ஐ.எம்.எப் பிரதிநிதிகளின் எதிர்ப்பார்ப்பு.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பின் பின்னணியில் தான் இலங்கை தொடர்ந்து ஆபத்தான பொருளாதாரப் பாதையில் சென்று கொண்டிருப்பதாகவே ஐ.எம்.எப் கருதுகின்றது.

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் (Extended fund facility-EFF) ஒரு பகு தியாக இலங்கையின் பொருளாதாரம் மற்றும் நிர்வாகத்தின் மீதான சர்வதேச நாணய நிதியத் தின் சமீபத்திய மதிப்பாய்வின் படி இலங்கைத் தீவில் எதுவுமே சரியாக இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

வடக்குக் கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவு மக்கள் தற்போது பொய்யான பாதுகாப்பு உணர்வை எதிர்கொள்வதாகக் கடன் வழங்கும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் கருதுவதாக தமொனிங் (Themorning) என்ற ஆங்கில செய்தித் தளம் கூறுகிறது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான், EFF திட்டத்தின் கீழ் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை மீளாய்வு செய்த ஐ.எம்.எப் பிரதிநிதிகள் இரண்டாவது தவணைக்குரிய நிதியை வழங்குவது பற்றி அறிவிப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளனர் என்ற முடிவுக்கு வரலாம்.

வருமானம் ஈட்டும் இலக்குகள் மற்றும் கடன் மறுசீரமைப்புத் திட்டம் ஆகிய இரண்டு முக்கிய பகுதிகள் குறித்து ஐ.எம்.எப் கவலை வெளியிட்டுள்ளது.

வருமானப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான கலந்துரையாடல்கள் ஐ.எம்.எப் உடன் தற்போது நடந்து கொண்டிருக்கும் வேளையில், ரணில் இந்த மாத நடுப்பகுதியில் சீனாவுக்குப் பயணம் செய்வதில் கவனம் செலுத்தியுள்ளார்.

சீனாவிடம் இருந்து சில உறுதியான அர்ப்பணிப்புகளை ரணில் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது, சீனா முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதாரச் சவால்களை வெற்றிகொள்ள சீனா உதவும் எனவும் ரணில் நம்புகிறார் போல் தெரிகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையான 330 மில்லியன் டொலர்கள் வழங்கப்படக்கூடிய நிலைமை இல்லை என்பதை அறிந்த பின்னணியிலேயே ரணில் சீனாவிடம் சரணடைந்திருக்க வேண்டும்.

முதற் கட்ட கணிப்புகளில் இருந்து 15% வருமானம் பற்றாக்குறையாகவுள்ளது. வருமான நோக்கங்களை நிறைவேற்றுவது வருமானம் மற்றும் செலவீனங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பது குறித்து இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு கூடுதல் கால அவகாசம் தேவைப்படும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான மூத்த தூதுவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருமானத்தில் 12% என்ற நோக்கத்தை எட்டுவது மற்றும் அடுத்த ஆண்டு மற்றொரு பற்றாக்குறையைத் தவிர்ப்பது குறித்து கவனம் செலுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் சில புதிய வரி சீர்திருத்தங்களை ஐ.எம்.எப் பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் 2019 ஆம் ஆண்டு செய்யப்பட்ட வரி குறைப்புகளை மாற்றியமைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட வரி சீர்திருத்தங்கள் வருமானத்திற்கும் செலவீனத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கப் போதுமானதாக இல்லை எனவும் பீட்டர் ப்ரூயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையே அமெரிக்காவுடன் இலங்கையின் நிதி நிலைமை குறித்துப் பேசி மேலும் சில ஆலோசனைகளைப் பெறமுடியுமென ஐ.எம்.எப் நம்புவதாக ரொய்டர் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

ஐ.எம்.எப் பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர், ஜனாதிபதி ரணில் செப்ரெம்பர் 26 ஆம் திகதி ஜேர்மனிக்குச் சென்றிருந்தார். அங்கு இடம்பெற்ற 'பேர்லின் குளோபல் உரையாடலில்' ஜனாதிபதி கலந்துகொண்டார்.

ஜேர்மன் ஜனாதிபதி ஓலாஃப் ஷோல்ஸை சந்தித்தார். இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தைப் பற்றி பேசியதுடன், இலங்கையின் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு பரிஸ் கிளப்பின் உதவியைப் பெறுவதற்கு ஜேர்மன் அரசின் ஆதரவைக் கேட்டிருந்தார்.

ஆனால், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர பரிஸ் கிளப் ஒக்ரோபர் மாதக் கடைசி வரை கால அவகாசம் கேட்டுள்ளது.

பரிஸ் கிளப்பின் ஒத்துழைப்பை பெற்று இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர ரணில் ஜேர்மனியில் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை.

ஆனாலும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை அணுகுவது குறித்தும் ரணில் பரிசீலிக்கிறார். இருந்தாலும் அந்த அணுகுமுறைகள் வெற்றியளிக்குமா? என்று கூற இயலாது.

இப்பின்புலத்திலேதான் ரணில், இம்மாத நடுப்பகுதியில் சீனாவிற்குப் பயணம் செய்யவுள்ளாதாகத் தெரிகிறது.

ஆனால், இங்கே வேடிக்கை என்னவென்றால் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ரணில் அக்கறை செலுத்தி வரும் நிலையில் அதற்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சிகள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளன.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோரால் இந்த மனு செவ்வாய்க் கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை உருவாக்குவதில் சீனாவுக்குப் பெரும் பங்களிப்பு உண்டு. அத்துடன் இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தின் நிலைத் தன்மையிலும் சீனா முக்கிய பங்கு வகிக்கிறது.

**(18 ஆம் பக்கம் பார்க்க...)**

# அரசியல் கட்சிகளின் பிடியில் சிக்கித்தவிக்கும் ஹர்த்தால்



சட்டா அதிபரின் (அரசு) அழுத்தத்தத்தினால் பதவியைத் துறந்ததாகச் சொல்லப்படும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு ஆதரவு தெரிவித்தும் அரசின் செயற்பாடுகளை எதிர்த்தும் பல விதமான போராட்டங்கள் தமிழ்ப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் போராட்டங்களில் வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் அரசியற் கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களும் கலந்து கொள்கின்றனர். சில போராட்டங்களை இவற்றில் சில தரப்புகள் முன்னெடுப்பதையும் காண முடிகிறது.

அதில் ஒரு போராட்டம், “நீதி தேவதைக்கு அரோஹரா”, “இலங்கைக்கு அரோஹரா” என்று கொக்குவிலில் நடந்தது. இந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் என்ன கருதினார்களோ தெரியாது. ஆனால், பலருக்கும் இது பகடியாகவே பட்டது.

இன்னொரு போராட்டம், மனித சங்கிலிப் போராட்டமென யாழ்ப்பாணத்தில் நடந்தது. அதுவும் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை.

இறுதியாக ஹர்த்தால் அறிவிக்கப்பட்டது. இதனை ஏழெட்டுக் கட்சிகள் இணைந்து அறிவித்துள்ளன. இதுவும் புதிதல்ல. வழமையாக இந்தக் கட்சிகள் செய்கின்ற வேலைதான். இதனுடைய பயன் எப்படி அமையும் என்று எல்லோருக்குமே தெரியும்.

வடக்குக் கிழக்கில் கடைகள், சந்தைகள் மூடப்படும். சந்தைகள் இயங்காது. பொதுப்போக்குவரத்து முடங்கும். இதிலும் அரச பேருந்துகளும் புகையிரத சேவையும் முடங்காது. அரச திணைக்களங்களும் பாடசாலைகளும் வழமையைப் போல நடைபெறும். மாணவரின் வருகை சில இடங்களில் குறைந்திருக்கும். நகரங்கள் வெறிச்சோடிப் போயிருக்கும். மற்றப்படி எல்லாமே வழமையைப்போல நடக்கும்.

மாலையில் தமிழ் இணையத் தளங்களும் மறுநாள் தமிழ்ப் பத்திரிகைகளும் “வடக்குக் கிழக்கு முடங்கியது. ஹர்த்தால் பூரண வெற்றி. அரசுக்குச் சாட்டையடி..” என்றவாறாகச் செய்திகளை வெளியிடும். அதோடு வரலாற்றுக் கடமை முடிந்துவிடும். இதற்கப்பால் ஹர்த்தால் எந்தப் பயனையும் தமிழ்ச்சமூகத்துக்குத் தந்து விடாது.

ஏறக்குறைய இதொரு சுய இன்ப விளையாட்டுத்தான். அல்லது நாமே நம்முடைய முதுகில் தட்டிப் பாராட்டிக் கொள்ளும் சங்கதியே.

ஹர்த்தால் என்றால் அது அரசை, ஆட்சியாளர்களை முடக்குவதாக இருக்க வேண்டும். அரசும் ஆட்சியாளர்களும் திணற வேண்டும். அப்பொழுதுதான் ஹர்த்தாலின் தாக்கம் எப்படியானது என்று அதற்குப் புரியும். வடக்குக் கிழக்கில் மட்டும் நிகழ்த்தப்படும் ஹர்த்தால் வடக்குக் கிழக்கு மக்களை மட்டுமே பாதிக்கும். அரசுக்கு உண்டாகும் பாதிப்பு மிகமிகச் சிறியதாகவே இருக்கும். ஆகவே இதையிட்டு அரசு கணக்கிற் கொள்ளாது. இதுதான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

“அப்படியென்றால் ஹர்த்தால் தோற்றுப் போன அரசியல் வடிவமா,?” என்று நீங்கள் கேட்கலாம்.

“ஜனநாயக ரீதியாக மக்களும் அரசியற் தரப்பினரும் முன்னெடுக்கக் கூடிய மிகச் சிறந்த போராட்ட வடிவங்களில் ஒன்று ஹர்த்தால். அப்படித்தான் காந்தி தொடக்கம் பலரும் ஹர்த்தாலைக் கையாண்டிருக்கிறார்கள். தனியே ஹர்த்தாலுடன் மட்டும் அவர்கள் நின்று விடவில்லை. ஹர்த்தாலையும் தமது அரசியற் செயற்பாட்டில் ஒன்றாகக் கையாண்டனர். அதில் வெற்றியும் கண்டனர்.

இங்கே முன்னெடுக்கப்படுகின்ற ஹர்த்தால் அப்படியானதல்ல. இதனால் ஒரு ஆணியையும் பிடுங்க முடியாது. இதை நமது அரசியல் தலைவர் (?)களும் நன்றாக அறிவர். ஆனால், அவர்களுக்கு வேறு கதியில்லை. ஏனென்றால் செயற்பாட்டு அரசியலை முன்னெடுப்பதற்கு யாரும் தயாரில்லை. புதிதாகச் சிந்திக்கும் திறனும் அவர்களிடம் கிடையாது. ஊடகர்கள், அரசியல் பதியாளர்கள், மக்கள் எல்லோருக்கும் கூட இதைப் பற்றித் தெரியும்.

ஆகவே எல்லோரும் தெரிந்து கொண்டே ஆடுகிற நாடகம் இது. அப்படியென்றால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் என்றுதானே அர்த்தம்!

இதற்குக் காரணம், தமிழ் அரசியலின் கையறு நிலையாகும். இனி என்ன செய்வது என்று தெரியாது குழம்பிக் கிடக்கிறது தமிழ்ச்சமூகம்.

முக்கியமாக இது போருக்கு முந்திய காலமா? போர்க்காலமா? போருக்குப் பிந்திய காலமா? என்ற தெளிவே பலருக்குமில்லை. ஏனென்றால், போருக்கு முந்திய fhy Pre-war politics (1980 க்கு முந்திய) அரசியலே இப்பொழுது முன்னெடுக்கப்படுகிறது. அதே சொல்லாடல்கள். அதே அறிக்கைகள். அதே பிரகடனங்கள். அதே அரசியல் வழிமுறைகள்.

ஆனால், அதற்குப் பிறகு எவ்வளவோ நடந்து விட்டன. முக்கியமாக 30 ஆண்டுகளாக போர்க்கால அரசியல் (Wartime Politics) மேற்கொள்ளப்பட்டது.

இப்பொழுது போருக்குப் பிந்திய கால அரசியலை (Post-war politics) முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். ஆனால் அது முன்னெடுக்கப்படவில்லை. இதற்கான புரிதல், விளக்கம் பலரிடத்திலும் இல்லை.



போர்க்குற்ற விசாரணை, அரசியற் கைதிகள் விவகாரம், காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான குற்றச்சாட்டு, மனித உரிமைகளுக்கு விடுக்கப்பட்ட சவால் அல்லது நெருக்கடி, நில மீட்பு போன்றனவெல்லாம் போருக்குப் பிந்திய கால (Post-war politics) அரசியல்தானே என்று நீங்கள் கேட்கலாம்.

இவையும் அவற்றில் அடங்கும். ஆனால் இவை மட்டுமல்ல நமது அரசியல் முன்னெடுப்புக்குரியவை. இவை உப பிரச்சினைகள். பிரதான பிரச்சினைகள் வேறு. அவை பலவிதமானவை. அவற்றைப்பற்றிய கரிசனையே நமக்கிருப்பதில்லை. அல்லது அவற்றின் மீதான கவனம் குவிக்கப்படுவது குறைவு.

தவிர சமகாலச் சிக்கல்களாக இருக்கும் இந்தப் பிரச்சினைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பதால் (புலம்பிக் கொண்டிருப்பதால்) எந்தப் பயனுமில்லை.

அரசு இந்த மாதிரிப் புதிய புதிய பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறது. நில அபகரிப்பு, தொல்பொருட்திணைக்களத்தின் தவறான அல்லது அவசியமற்ற நடவடிக்கைகள் (தலையிடிகள்), பல்வேறு விதமான அச்சுறுத்தல்கள், அதிகாரக் குழப்பங்கள் (மத்தி, மாகாணம் போன்றன), நிர்வாக ஒழுங்கீனங்கள் (ஆளுனர், அதிகாரிகள் நியமனங்கள் தொடக்கம் நிதி ஒதுக்கீடுகள், நிதிக்கையாளல்கள் போன்றவை) இப்படி எதையாவது அவ்வப்போது உருவாக்கி குழப்பிக் கொண்டேயிருக்கிறது.

அப்படியானவற்றில் ஒன்றுதான் நீதிபதி சரவணராஜா விவகாரமும். இது தீர முன்பு இன்னொரு புதிய பிரச்சினையை நம்முடைய காலடியில் கொழுத்திப் போட்டு விடும். அப்பொழுது நாம் அதற்குப் பின்னே ஓடுவோம்.

ஒடுக்குமுறை அரசுகளின் உத்தி அப்படித்தானிருக்கும். இதைப் புரிந்து கொண்டு, இதை முறியடிக்கும் ஆற்றலுடன் நமது அரசியலை முன்னெடுக்க வேண்டும். ஆனால் அதற்கு ஆளில்லை. அப்படி யாராவது முன்வந்தாலும் அதை ஆதரிப்பதற்கும் ஆளில்லை.

ஆகவேதான் இந்த மாதிரிக் ஹர்த்தால் விளையாட்டு. இதைச் சோம்பேறி அரசியலின் வடிவமாக்கியாயிற்று.

செயற்பாட்டு அரசியலின் பலவீனமே இப்படியான நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. அடுத்தது புதிதாகச் சிந்திக்க முடியாத- அப்படிச்சிந்திப்பதற்கு அச்சப்படும் தயக்கம். இதனால்தான் இந்த மாதிரிப் பழைய குப்பையைக் கிளறி எதையாவது எடுப்போம் என இலகுவழியில் சிந்திக்கத்தூண்டுகிறது. இதில் செயற்பாட்டியக்கப் பாரம்பரியத்திலிருந்து வந்த சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோரும் சிக்கியிருப்பதுதான் வரலாற்றின் துயரம். இவர்களும் தோற்றுப்போன அரசியல் வடிவத்திற்குள் சிக்குண்டிருப்பது கவலையளிப்பது. இவர்களாவது புதிதாகச் சிந்திக்க வேண்டும்.

அடுத்த தலைமுறை என்று சொல்லப்படும் இளைஞர்களாக இருப்போரும் ஹர்த்தால், எதிர்ப்புப் போராட்டம் என்று அங்கங்கே நடத்தப்படுகிற குட்டிக் குட்டி எதிர்ப்புகளுக்கு அப்பால் சிந்திக்கக் கூடியவர்களாக இல்லை. பல்கலைக்கழக மாணவர் இயக்கங்கள் எப்போதோ காலாவதியாகி விட்டன. **(11 ஆம் பக்கம் பார்க்க...)**

# ஹமாஸ் தாக்குதலில் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் விபரம்

பலஸ்தீனிய போராளிக் குழுவான ஹமாஸ் இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தியதில் பல வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர் அல்லது பணயக் கைதிகளாக 800 பேரைக் கொன்றனர், பெரும்பாலும் இஸ்ரேலியர்கள்.

காணாமல் போன வெளிநாட்டவர்களில் பலர் தெற்கு இஸ்ரேலிய பாலைவனத்தில் மின்னணு இசை விழாவில் கலந்துகொண்டனர். இதில் ஏராளமான ரசிகர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**தாய்லாந்து: 12 பேர் பலி, 11 பணயக்கைதிகள்**

12 தாய்லாந்து தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர், எட்டு பேர் காயமடைந்தனர் மற்றும் 11 பேர் சிறைபிடிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் காஞ்சனா பட் டரசோக் திங்களன்று தெரிவித்தார்.

தொழிலாளர் அமைச்சர் பிபாட் ரட்சகிட்பிரகர்ன் கூறுகையில், சண்டையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 5,000 தாய்லாந்து தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர், அவர்கள் பாது காப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

**அமெரிக்கா: 11 பேர் இறந்தனர், மற்றவர்கள் காணவில்லை**

அமெரிக்கா திங்களன்று குறைந்தது 11 அமெரிக்க குடிமக்கள் இறந்ததை உறுதிப்படுத்தியது மற்றும் ஹமாஸால் பிணைக் கைதிகளில் அமெரிக்கர்களும் இருக்கலாம் என்று கூறியது.

“துரதிஷ்டவசமாக, கொல்லப்பட்டவர்களில் குறைந்தது 11 அமெரிக்க குடிமக்கள் உள்ளனர் என்பதை நாங்கள் இப்போது அறிவோம். அவர்களில் பலர் இஸ்ரேலில் இரண்டாவது வீட்டை உருவாக்கினர்” என்று ஜனாதிபதி ஜோ பைடன் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

**நேபாளம்: 10 பேர் பலி**

ஹமாஸ் தாக்குதலின் முக்கிய புள்ளிகளில் ஒன்றான கிப்புட்ஸ் அலுமிமில் நேபாளத்தின் பத்து குடிமக்கள் கொல்லப்பட்டதாக டெல் அவிவில் உள்ள இமாலய குடியரசின் தூதரகம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

மேலும் நான்கு பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஐந்தாவது நபரைத் தேடும் பணி நடைபெற்று வருவதாகத் தூதரகம் மேலும் கூறியது.

தாக்குதலின் போது கிப்புட்ஸ் அலுமிம் 17 மாணவர்களுக்கு விருந்தளித்தார்.

**ஆர்ஜென்ரீனா: 4 பேர் பலி, 5 பேர் காணவில்லை**

ஆர்ஜென்ரீனாவின் வெளிவிவகார அமைச்சு திங்களன்று அந்நாட்டு பிரஜைகள் நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும் மேலும் ஐந்து பேர் காணவில்லை என்றும் உறுதிப்படுத்தினர்.

**உக்ரைன்: 2 பேர் பலி**

பல ஆண்டுகளாக இஸ்ரேலில் வசித்து வந்த இரண்டு உக்ரைன் பெண்கள் கொல்லப்பட்டதாக உக்ரைனின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஒலெக் நிகோலென்கோ ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

**பிரான்ஸ்: 2 பேர் பலி, 14 பேர் காணவில்லை**

“இஸ்ரேலுக்கு எதிரான ஹமாஸ் பயங்கரவாதத் தாக்குதலில்” இரண்டு பிரெஞ்சு மக்கள் கொல்லப்பட்டதாக பிரெஞ்சு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் இஸ்ரேலில் கொடிய தாக்குதல்களை நடத்திய பின்னர் காணாமல் போன அதன் நாட்டவர்களில் 14 பேரில் 12 வயது சிறுவனும் உள்ளான், இது “கவலைக்குரியது” என்று பிரெஞ்சு வெளியுறவு அமைச்சகம் கூறியது.

“எங்களிடம் உள்ள தகவல்களின் அடிப்படையில், அவர்களில் சிலர் கடத்தப்பட்டிருக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம்”, அமைச்சகம் ஒரு அறிக்கையில் கூறியது, “இந்த எண்ணிக்கை இன்னும் மாற்றத்திற்கு உட்பட்டது” என்று கூறியது.

**ரஷ்யா: ஒருவர் பலி, 4 பேர் காணவில்லை**

ரஷ்ய செய்தி நிறுவனங்களால் மேற்கோள் காட்டப்பட்ட டெல் அவிவில் உள்ள ரஷ்ய தூதரகம் திங்களன்று அறிவித்தது, குறைந்தது ஒரு ரஷ்யர் கொல்லப்பட்டார் மற்றும் நான்கு பேர்



காணவில்லை

**இங்கிலாந்து: ஒருவர் இறந்தார், ஒருவரைக் காணவில்லை**

பிரிட்டனுக்கான இஸ்ரேல் தூதுவர், 26 வயதான பிரிட்டிஷ் குடிமகன் ஒருவரைக் காணவில்லை, அந்த நபரின் பெயரைக் குறிப்பிடாமல் கூறினார்.

இஸ்ரேலிய இராணுவத்தில் பணியாற்றிய பிரித்தானியரான நத்தனெல் யங் (20) என்பவரும் ஹமாஸுடனான சண்டையில் உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினர் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

**கனடா: ஒருவர் உயிரிழந்தார், 2 பேர்**

ஒருவர் பலி, 2 பேர் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கனேடியர் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் இருவர் காணாமல் போயுள்ளதாகவும் வெளியான செய்திகளை உறுதிப்படுத்த முயற்சிப்பதாக கனேடிய அரசாங்கம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

**கம்போடியா: ஒருவர் இறந்தார்**

கம்போடிய மாணவர் ஒருவர் கொல்லப்பட்டதாக கம்போடியா பிரதமர் ஹன் மானெட் தெரிவித்தார்.

**ஜேர்மனி: பல பணயக்கைதிகள்**

ஜேர்மன்-இஸ்ரேலிய இரட்டை பிரஜைகள் கடத்தப்பட்டதாக ஜேர்மன் வெளியுறவு அமைச்சக வட்டாரம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

22 வயதான ஷானி லூக்கின் தாய் டெர் ஸ்பீகல் என்ற செய்தி நிறுவனத்திடம் கூறுகையில், காசாவில் பிக்-அப் டிரக்கின் பின்புறத்தில் ஒரு அரை நிர்வாணப் பெண் முகம் குப்புற படுத்திருக்கும் வீடியோக்களில் தனது மகளை அடையாளம் கண்டுகொண்டேன் என்றார்.

ரிகார்டா லூக் ஸ்பீகலிடம் தனது மகள் இசை விழாவில் இருந்ததாகக் கூறினார்.

**பிரேசில்: 3 பேரைக் காணவில்லை, ஒருவர் காயமடைந்தார்**

பிரேசிலின் வெளியுறவு அமைச்சகம் ஞாயிற்றுக்கிழமை, மூன்று பிரேசில்-இஸ்ரேலிய பிரஜைகள் திருவிழாவில் கலந்து கொண்ட பின்னர் காணாமல் போனதாகவும் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

**இத்தாலி: 2 பேரைக் காணவில்லை**

இரண்டு இஸ்ரேலிய-இத்தாலியர்கள் காணவில்லை என்று இத்தாலிய வெளியுறவு அமைச்சர் அன்டோனியோ தஜானி கூறினார்.

“அவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை மற்றும் அழைப்புகளுக்கு பதிலளிக்கவில்லை,” என்று அவர் கூறினார்.

**தான்சானியா: 2 பேரைக் காணவில்லை**

இரண்டு தான்சானிய பிரஜைகளைக் காணவில்லை என இஸ்ரேலுக்கான தான்சானியா தூதர் AFP இடம் தெரிவித்தார்.

**பராகுவே: 2 பேர் காணவில்லை**

இஸ்ரேலில் வசித்து வந்த இரண்டு பராகுவே நாட்டு பிரஜைகள் காணாமல் போயுள்ளதாக பராகுவேயின் அரசாங்கம் விவரம் தெரிவிக்காமல் தெரிவித்துள்ளது.

**மெக்சிக்கோ: 2 பணயக்கைதிகள்**

மெக்சிக்கோவின் வெளியுறவு மந்திரி அலிசியா பார்செனா எக்ஸ், முன்பு டுவிட்டரில் எழுதினார், இரண்டு மெக்சிகன்கள், ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர், மேலும் விவரங்கள் எதுவும் தெரிவிக்கவில்லை.

**கொலம்பியா: 2 பணயக்கைதிகள்**

சூப்பர்நோவா விழாவில் கலந்து கொண்ட இரண்டு கொலம்பியாவைக் காணவில்லை என்று கொலம்பியாவுக்கான இஸ்ரேல் தூதர் ஓ இல் தெரிவித்தார்.

கொலம்பிய அரசாங்கம் இரண்டு கொலம்பியர்கள் வெறித்தனத்தில் இருப்பதை உறுதிப்படுத்தியது மற்றும் அவர்களைக் கண்டுபிடிக்க உதவ முயற்சிப்பதாகக் கூறியது.

**பனாமா: ஒருவரைக் காணவில்லை**

பனாமாவின் நாட்டவர்களில் ஒருவரான Daryelis Denises Saez Batista காணாமல் போனதாக பனாமா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அயர்லாந்து: ஒருவரைக் காணவில்லை

ஐரிஷ்-இஸ்ரேலிய பெண் ஒருவர் காணாமல் போனது அயர்லாந்து அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ■

# தற்காலத்தில் ஆங்கிலக் கல்வி

சி.கதீசனா
ஊடக கற்கை
2ம் வருடம்

இன்றைய ஒவ்வொரு தனிமனித வெற்றிக்கும் இன்றியமையாத காரணியாக கல்வி காணப்படுகிறது. கல்வியால் தன்னை உயர்த்திக் கொள்ள ஒவ்வொரு தனி மனிதனும் ஓடிக்கொண்டிருக்கின்றான். அதன் அடிப்படையில் இன்றைய உலகில் ஆங்கிலக் கல்வியானது அவசியமாகக் காணப்படுகின்றது. இவ்வுலகில் விஞ்ஞான வளர்ச்சியோடு நாம் சமமாக நடைபோட வேண்டுமானால் ஆங்கில அறிவுடன் கூடிய கணினி அறிவும் கட்டாயம் தேவை. மொழி என்பது தொடர்பாடலுக்கு அவசியமான ஒன்றா கும். அதன் அடிப்படையில் ஒரு மனிதன் மொழி அறிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு கருத்துகளின் பரிமாற்றமும் மொழியில் தங்கி உள்ளது. இவ்வாறு ஆங்கிலமொழி ஒரு சர்வதேச பொதுமொழியாகும்.

ஆங்கிலக் கல்வியின் அறிவின்றி இன்று பயணிப்பது சிரமமான விடயமாகும். உலகளாவிய தொழில் வாய்ப்புகள் ஆங்கில அறிவை மையப்படுத்தும் விதத்திலேயே காணப்படுகின்றன. உலகில் உள்ள பல்வேறு வணிக நிறுவனங்கள் ஆங்கில அறிவினை முதன்மை திறனாகக் கொண்டே ஒரு நிறுவனத்திற்கான ஒரு ஊழியரை தெரிவு செய்கின்றன.

இன்றைய ஆங்கிலக் கல்வியானது கல்வி நிர்வாகச் சேவையில் பாரியளவு செல்வாக்கு செலுத்துகின்றது. விரும்பியோ விரும்பாமலோ ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெற வேண்டும். எல்லா நாடுகளிலும் ஆங்கிலம் ஏதோ ஒரு வகையில் கற்பிக்கப்படும். சில நாடுகளில் ஆங்கிலம் தாய்மொழியாகவும் வேறு சில நாடுகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாகவும் பேசப்பட்டு வருகிறது. உலகமயமாக்கல் நிகழும் இக்காலச் சூழ்நிலையில் பாமர மக்களும் ஆங்கில அறிவை எடுத்துச் செல்ல வேண்டிய தேவை காணப்படுகிறது. இலங்கையில் வேலையில்லா பிரச்சினை என்று கூறப்படும் வாதத்திற்கு ஆங்கில மொழிகூட ஒரு மருந்தாகலாம்.




ஆங்கில மொழியில் தேர்ச்சி,அறிவாற்றல் அதிகரிக்குமானால் எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கையோடு கூடிய நிறுவனங்களிலும் வேலை ஸ்தாபனங்களிலும் வேலை செய்ய மக்கள் முன் வருவர் மேலும் வெளிநாடுகளுக்கு செல்வதன் மூலமும் தரமான சிறப்பான வேலைகளை இலகுவாக பெற முடியும். இந்த நிலையில் இலங்கையின் சிறந்த அந்நியச் செலாவணியைக்கூட பெறவாய்ப்பு உள்ளது.

சிறுவயது கல்வி தொடக்கம் பாடசாலைக் கல்வி, பல்கலைகழகக் கல்வி என அனைத்து மட்டங்களிலும் ஆங்கில மொழியில் சிறப்பு பெற்றிருக்க வேண்டும். தற்காலத்தில் வாழும் சாதாரண மனிதன் பொது அறிவு நிறைந்தவனாக இருக்க வேண்டும். அந்த வகையில் ஆங்கில பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் சிறந்த பொது அறிவை தருகின்றன. ஒவ்வொரு துறைகளிலும் ஆங்கிலத்தின் பங்கு காணப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் தாய்மொழி பிரதான மொழியாக இருந்தாலும் அதனோடு இணைந்தவாறு ஆங்கில மொழியும் முதன்மை இடம் வகிக்கின்றது. ஒவ்வொரு பெற்றோர்களும் பிள்ளைகளிடம் ஆங்கில மொழியை ஊட்டுவதில் அக்கறையோடு செயற்பட வேண்டும். சில பெற்றோர்களின் கவனயீனத்தாலும் அக்கறை இன்மையாலும் மாணவர்கள் பலர் மொழியில் விருப்பமின்றி வெறுப்புற்று காணப்படுவதை நமது கண்முன்னே காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான தவறுகள் இனி வரும் காலங்களில் இடம்பெறாமல் தடுக்க வேண்டும் திணிக்காது தரம் ஒன்றிலிருந்து மேம்படுத்திக் கொண்டு வருதல் வேண்டும். இதுவரை காலமும் ஆங்கில அறிவில் ஏற்பட்ட அலட்சியம் இனிவரும் காலங்களில் ஏற்படாமல் இருக்க வேண்டும்.





ஆங்கிலமொழியில் ஒருவன் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பானாயின் அவனுடைய தொடர்பாடல் திறன் அதிகரிப்பது மட்டுமல்லாமல் தலைமைத்துவ பண்புகள், ஆளுமைப் பண்புகள் இயல்பாகவே வளர்ச்சியடையும். அவற்றைவிட ஒரு கடையிலோ அல்லது பொது இடங்களிலோ என எங்கு சென்றாலும் தற்காலத்தில் அதிகம் ஆங்கில வார்த்தை பிரயோகங்களே பயன்பாட்டில் உள்ளன.

ஆகவே, ஆங்கிலமொழியில் தேர்ச்சி பெற்றிருப்பானாயின் அவன் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளக் கூடிய வகையில் பலமிக்க ஒருவனாக தற்காலத்தில் திகழ்கின்றான்.

ஆங்கிலமொழியின் அவசியத்தை குறிப்பாக கிராமப்புற மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்களுடைய பிள்ளைகளின் எதிர்கால கல்வி வாழ்க்கை பட்டப்படிப்பு வாழ்க்கையில் ஆங்கிலக் கல்வியானது அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. இலங்கையில் ஆங்கிலக் கல்வி அறிவு கிராமப்புறங்களில் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. நகர்ப்புறங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கிராமப்புற மக்களின் ஆங்கிலக்கல்வியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். ஆங்கிலக்கல்வியில் பின்தங்கிய தன்மையில் உள்ள மாணவர்கள் அதிலிருந்து மீண்டும் ஆங்கிலக் கல்வி அறிவைப் பெற்று அவர்களுக்குரிய வாய்ப்புகளைத் தேடி ஆங்கிலக்கல்வி மூலம் அவர்களின் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

அண்மைக் காலங்களில் அரச பாடசாலைகளில் வாரத்திற்கு ஒரு நாள் அனைத்துத் தொடர்பாடல் நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில் இடம் பெறவேண்டும் என்ற திட்டம் இலங்கை அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டது. அத்திட்டத்தை திறம்படச் செய்ய ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன. உண்மையில் இலங்கை அரசாங்கத்தால் இந்த நடவடிக்கை வரவேற்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இதன் ஊடாக ஆங்கில மொழி விருத்தியில் இலங்கை அரசாங்கத்தால் கரிசனை காட்டப்படுவது உண்மையாகும். அரசாங்கத்தால் பல்வேறு திட்டங்கள் இருந்தாலும் மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவு மட்டும் கீழ்நிலையில் உள்ளது எனவே இந்நிலை மாற வேண்டும். மாணவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் இவ்வுலகில் ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தற்காலத்தில் ஆங்கிலக் கல்வியின் தேவையை ஒவ்வொருவரும் உணர்ந்து அதற்கேற்ப செயற் படுவார்களாயின் ஏதோ ஒரு விதத்தில் வெற்றியைப் பெற முடியும். ■

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி 83

ரமணி

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய மொழித் திரைப்படங்களில் நடித்து ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தவர் ராஜசுலோசனா.

தெலுங்கை தாய்மொழியாகக் கொண்டாலும் படித்தது, வளர்ந்தது, நடித்தது எல்லாமே தமிழகத்தில்தான். இவரது தாய்க்கு நடனம், இசையில் நல்ல ஆர்வம் இருந்ததால் 8 வயதிலேயே ராஜசுலோசனாவுக்கு வாய்ப்பாட்டு, வயலின், சப்தஸ்வரம் என கற்றுக்கொடுத்தார்.

கதாநாயகி, குணசித்திரம், நகைச்சுவை, வில்லி பாத்திரங்களில் நடித்து முத்திரை பதித்தவர். இரண்டாவது, மூன்றாவது கதாநாயகியானாலும் தனி முத்திரை பதித்து ரசிகர்களைக் கவர்ந்தவர். கதாநாயகனுக்கு இணையான வில்லியாக நடித்து மிரட்டியவர்.

எம்.ஜி.ஆர், சிவாஜி, தெலுங்கில் என்.டி.ஆர், கன்னடத்தில் ராஜ்குமார் என அனைத்து முன்னணி நட்சத்திரங்களுடனும் நடித்து தனது யதார்த்தமான அபார நடிப்பை வெளிப்படுத்தினார்.

1950களில் நடிக்க வந்த நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த நடிகை. இனிமையான குரலும் மென்மையாகப் பேசவும் தெரிந்த நடிகை. அவர் பேசும் வசனங்களே இதற்கு சாட்சி. ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் 15.8.1935 இல் பிள்ளையார்சட்டி பக்தவச்சலம் நாயுடு, தேவகி தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். தந்தை பக்தவச்சலம் வெள்ளைக்காரன் காலத்தில் சென்னையில் ரயில்வேத்துறையில் பணிபுரிந்தார். பெற்றோர் இட்ட பெயர் ராஜீவலோசனா. மழலை மொழியில் பள்ளியில் இவர் தன் பெயரை ராஜசுலோசனா என சொல்லவே அதுவே பெயரானது.



திரைப்படங்களில் திருவிதாங்கூர் சகோதரிகள் லலிதா, பத்மினி இருவரும் ஆடுவதைப் பார்த்து தானும் அவர்களைப் போலவே நடனம் ஆட வேண்டும் என்ற எண்ணம் சிறுவயதிலேயே வளர்ந்தது. இதை அவரது பெற்றோரிடம் சொல்லவே மகளின் விருப்பத்திற்கு மறுப்பு சொல்லாமல் நாட்டியமும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

திருவல்லிக்கேணியில் லலிதா என்பவரிடம் நாட்டியத்திற்கான ஆரம்பப் பாடத்தைக் கற்றார். பத்மினி, வைஜெயந்திமாலாவை உருவாக்கிய கே.ஏ.தண்டபாணியிடம் பரதநாட்டியம் கற்றார். குச்சுப்புடி, கதகளி நடனங்களையும் அந்தந்த வல்லுநர்களிடம் கற்றுத் தேர்ந்தார்.

ராஜசுலோசனாவின் முதல் பரத நாட்டிய நிகழ்வு உச்ச நீதிமன்ற நீதியரசர் பி.எல்.வெங்கட்ராமஅய்யர் தலைமையில் நடந்தது. ராஜசுலோசனாவுடன் நடனம் பயின்ற மற்றொரு மாணவி, நடிகை 'தாம்பரம் லலிதா.' எம்.சி சி.மைதானத்தில் லலிதா நாட்டியக் குழுவினரின் நிகழ்ச்சி. நடனமாது ஒருவர் வரவில்லை. ராஜசுலோசனா தன் தோழிக்குக் கால் கொடுத்தார். பாம்பாட்டியாகவும் கிருஷ்ணராகவும் ஆடிப் பாடினார்.

அதை நேரில் கண்டு ரசித்தவர் கன்னட சினிமா இயக்குநர் சின்ஹா. ராஜசுலோசனாவை நடிக்கக் கூப்பிட்டார். வீட்டில் எதிர்ப்பு அணிவகுத்தது. ஆருடம் பார்த்தனர் பெற்றோர். 'ஒப்பனை ஒளிவீசத் திரையில் மின்னுவார்' என்றே அத்தனை பண்டிதரும் அடித்துச் சொன்னார்கள். ராஜசுலோசனாவின் முதல் படம் ஹொன்னப்ப பாகவதர்-பண்டரிபாய் நடிக்க, கன்னடத்தில் 'குணசாகரி' எனவும், தமிழில் 'சத்தியசோதனை' எனவும் தயாரானது. மிகச் சிறிய வேடம். நடனம் ஆடவும் முடிந்தது.



1952 இல் வந்த பராசக்தி படத்திலேயே ராஜசுலோசனா சிவாஜியின் தங்கை கல்யாணியாக நடிக்க வேண்டிய வாய்ப்பு கிட்டியது. ஆனால், அந்த சமயத்தில் அவர் கர்ப்பவதியாக இருந்ததால் அந்த வாய்ப்பு ஸ்ரீரஞ்சனிக்கு கொடுக்கப்பட்டது.

ஏ.பி.நாகராஜன் இயக்கத்தில் வெளியான நால்வர் படத்தில் ராஜசுலோசனா அறிமுகமானார். தொடர்ந்து மாங்கல்யம், பெண்ணரசி ஆகிய படங்கள் ராஜசுலோசனாவை ரசிகர்கள் அனைவரும் கவரும் வகையில் வெளியானது. 1955 இல் வெளியான பெண்ணரசி படத்தில் ஒரு நாட்டின் அரசியல் நிர்வாகத்திற்குள் ஊடுருவி நாட்டின் அமைதியைக் குலைத்துவிடும் நாட்டியக்காரி ஜீவாவாக பேர் சொல்லும் படியான கதாபாத்திரத்தில் நடித்து இருந்தார். 1955 இல் வெளியான டி.ஆர்.ராமண்ணா இயக்கத்தில் வெளியான குலேபாகாவலியில் தன் வசீகரிக்கும் சிரிப்பாலும் சொக்க வைக்கும் பார்வையாலும் ரசிகர்களை இருக்கையை விட்டு எழ முடியாதவாறு கட்டிப் போட்டுள்ளார் டி.ஆர்.ராஜகுமாரி. அவருடன் காந்தக்கண்ணழகி ஜி.பரலட்சுமி நடித்துள்ளார்.

வில்லியாகவும் பி.எஸ்.வீரப்பாவுக்கு ஜோடியாகவும் நடித்திருந்தார். படத்தில் ஈ.வி.சரோஜா, சூரியகலா என இரு கதாநாயகிகள் இருந்தும் நாட்டியக்காரி ஜீவாவின் நடனத்தில்தான் ரசிகர்கள் அனைவருமே சொக்கிப் போனார்கள். அப்போது அவரை நேரில் பார்த்து விடவேண்டும் என அவரது வீட்டு வாசலில் ரசிகர்கள் வந்து குவிந்துள்ளனர். மர்மவீரன், அறிஞர் அண்ணாவின் ரங்கோன் ராதா, எம்.ஜி.ஆருடன் குலேபாகவாலி ஆகிய படங்களிலும் நடித்தார். சிவாஜியுடன் அம்பிகாவதி படத்தில் நடித்தார்.

டி.ஆர். ராமண்ணாவின் 'குலேபகாவலி'யில் ராஜசுலோசனா முதன்முதலாக எம்.ஜி.ஆருடன் நடித்தார். ராஜசுலோசனா ஆடிப்பாடிய 'என் ஆசையும் உன் நேசமும் ரத்த பாசமும்', 'குலேபகாவலி'யைக் கூடுதல் குஷிப்படுத்தியது. அதன் வெற்றியைத் தொடர்ந்து ராஜசுலோசனா இல்லாமல் சினிமாவே வராது என்ற நிலை.

1959 பொங்கல் வெளியீடு 'தை பிறந்தால் வழி பிறக்கும்'. ஓஹோவென்று ஓடிற்று. ராஜசுலோசனாவை மேலும் பிரபலமாக்கியது. 'அமுதும் தேனும் எதற்கு' இரவுகளை சாஸ்வதமாக இனிக்கச் செய்கிறது.

அண்ணாவின் 'நல்லவன் வாழ் வான்' திரைப் படத்தில் கவிஞர் வாலி எம்.ஜி.ஆருக்கு எழுதிய முதல் பாடலில் (சிரிக்கின்றாள் இன்று சிரிக்கின்றாள்) ஆடிப்பாடும் வாய்ப்பு ராஜசுலோசனாவுக்குக் கிடைத்தது. அதன் மற்றொரு டூயட்டான 'குற்றால அருவியிலே குளித்ததைப் போல் இருக்குதா' பட்டிதொட்டிகளிலும் பட்டையைக் கிளப்பியது.

எம்.ஜி.ஆர்.ஜோடியாக ராஜசுலோசனா நடித்த படம் 'நல்லவன் வாழ்வான்' படம். மிகக் குறுகிய காலத்தில் எடுக்கப்பட்ட படம். படத்தின் ரிலீஸ் திகதியை அறிவித்துவிட்டார்கள்.

இரவு பகலாகப் படப்பிடிப்பு நடந்தது. நாள் முழுவதும் நடித்த அலுப்பு, விடியும் வரை தொடர்ந்தது.

பொலிஸ் ராஜசுலோசனாவைத் துரத்தும் காட்சியில் நிஜமாகவே மயங்கி விழுந்துவிட்டார்.

அவர் கண் விழித்தபோது கையில் ஆவி பறக்கும் சூடான காபியுடன், முகத்தில் கவலையுடன் எம்.ஜி.ஆர் நின்றார்.

அடுத்து டூயட் ஒன்று படமாவதற்காகக் காத்திருந்தது. முடியுமா...' என டைரக்டர் கேட்டதற்கு ராஜசுலோசனா ஓமெனத்தலயாட்டினார். எம்.ஜி.ஆர் தலையிட்டு அன்று பாடல் காட்சியை எடுக்க வேண்டாம் என்றார்.

ராஜசுலோசனாவுக்கு குணவதி - அடாவடிப் பெண் என இரு வேடங்களில் 'கவிதா' படத்தில் நடிக்கும் வாய்ப்பை வழங்கியது மார்ட்டன் தியேட்டர்ஸ்.

அதற்கு முக்கிய காரணம், அவர்களது 100 நாள் படமான 'கைதி கண்ணாயிரம்'. அதில் ராஜசுலோசனா இடம்பெற்ற 'கொஞ்சிக் கொஞ்சிப் பேசி மதி மயக்கும்' பாடல் பெற்ற வரவேற்பு.

'படித்தால் மட்டும் போதுமா' வெற்றிச் சித்திரத்தில் நடிகர் திலகத்தின் மனைவியாக ராஜசுலோசனாவின் குணச்சித்திர நடிப்பு கொடிகட்டிப் பறந்தது.

சிவாஜி குடித்துவிட்டு வந்து ராஜசுலோசனாவிடம்,'நான் கவிஞனுமில்லை நல்ல ரசிகனுமில்லை' என்று உள்ளக்குமுறலை உதடுகளில் உயிரூட்டிப் பாடி நடித்திருப்பார்.

பெரிசுகள் இன்னமும் தங்கள் இதயத்தில் பச்சை குத்திக்கொண்ட காட்சி அது!

'இதயக்கனி'யில் ராஜசுலோசனா ஏற்ற கொள்ளைக் கூட்டத்தலைவி வேடம் எவரும் எதிர்பாராதது.

ஜேம்ஸ்பாண்ட் ஜெய்யுடன் ராஜசுலோசனா மோதிய 'துணிவே துணை' எமர்ஜென்ஸி காலத்தில் வசூலில் முரசு கொட்டியது. ரஜினியுடன் ராஜசுலோசனா நடித்த 'காயத்ரி' பரபரப்பாக ஓடியது.

ராஜசுலோசனாவின் கடைசி தமிழ்ப் படம் வெள்ளிவிழா கொண்டாடிய டி.ராஜேந்தரின் 'எங்க வீட்டு வேலன்'.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என்று ஐந்து மொழிகளிலும் சொந்தக் குரலில் பேசி நடித்தவர் ராஜசுலோசனா.

பிரபல தெலுங்கு டைரக்டர் சி.எஸ்.ராவ் - ராஜசுலோசனாவின் கணவர்.

இந்தியத்திரை உலகிலேயே இரட்டைப் பெண் குழந்தைகளை பெற்ற ஒரே நட்சத்திரத் தாய் ராஜசுலோசனா!

தண்டபாணி பிள்ளையின் மாணவியாக நடனக் கலையைப் பரிபூரணமாகக் கற்றவர்.

ஆந்திரத்தின் 'குச்சுப்புடி' உயர்வடைய ராஜசுலோசனாவின் பாதங்கள் பாடுபட்டன.

எழுபதுகளுக்குப் பின்னர் தெலுங்கிலும் தமிழிலும் முகம் சுளிக்கும் விதத்தில் ராஜசுலோசனா நடித்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

ஆயினும் சக கலைஞர்களால் 'நல்ல மனுஷி!' என்று பாராட்டப்பட்டவரும் அவரே!

அண்ணா, மு.கருணாநிதி, எம்.ஜி.ஆர், என்.டி. ராமாராவ், ஜெயலலிதா என்று ஐந்து முதல்வர்களுடனும் பணியாற்றியவர் ராஜசுலோசனா. ■

# காஸாவை முடக்கியது இஸ்ரேல்

ஹமாஸ் பிடித்து வைத்திருக்கும் பணயக்கைதிகளை விடுவிக்கும் வரை காஸா பகுதிக்கு உதவிகளை வழங்க அனுமதிக்க மாட்டோம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. பணயக்கைதிகள் அனைவரும் வீடு திரும்பும் வரை காஸாவில் ஒரு மின்சார விளக்கும் எரியாது, ஒரு குழாயிலும் தண்ணீர் வராது, ஒரு எரிபொருள் வாகனம்கூட உள்ளே நுழைய முடியாது என இஸ்ரேலில் எரிசக்தித்துறை அமைச்சர் இஸ்ரேல் கேட்ஸ் தனது சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய இராணுவ செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் கர்னல் ரிச்சர்ட் ஹெக்ட் வியாழனன்று செய்தியாளர்களிடம் கூறுகையில், அரசியல் தலைவர்கள் கட்டளையிட்டால் படைகள் “தரை சூழ்ச்சிக்கு தயாராகி வருகின்றன”. 40 கிலோமீற்றர் (25 மைல்) நீளமுள்ள நிலப்பரப்பில் மக்கள் அடர்த்தியாக நிரம்பியிருக்கும் காஸாவில் தரை வழித்தாக்குதல், மிருகத்தனமான வீட்டுக்கு வீடு சண்டையில் இருதரப்பிலும் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

சனிக்கிழமையன்று ஹமாஸின் தாக்குதலில் 247 வீரர்கள் உட்பட 1,300 பேர் இஸ்ரேலில் கொல்லப்பட்டனர். பல தசாப்தங்களாக இஸ்ரேலில் காணப்படாத ஒரு எண்ணிக்கை, அதைத் தொடர்ந்து இஸ்ரேலிய குண்டுவீச்சு காஸாவில் 1,400 ற்கும் மேற்பட்டவர்களைக் கொன்றது, இரு தரப்பு அதிகாரிகளின் கூற்றுப்படி. இஸ்ரேலுக்குள் சுமார் 1,500 ஹமாஸ் போராளிகள் கொல்லப்பட்டதாகவும் காஸாவில் இறந்த நூற்றுக்கணக்கானவர்கள் ஹமாஸ் உறுப்பினர்கள் என்றும் இஸ்ரேல் கூறுகிறது.

இஸ்ரேல் காஸாவை வான்வெளியில் இருந்து தாக்கும் போது, ஹமாஸ் போராளிகள் ஆயிரக்கணக்கான ராக்கெட்டுகளை இஸ்ரேல் மீது ஏவியுள்ளனர். இப்பகுதியில் சண்டை பரவக்கூடும் என்ற கவலைகளுக்கு மத்தியில், வியாழன் அன்று இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் இரண்டு சிரிய சர்வதேச விமான நிலையங்களை சேவையிலிருந்து நீக்கியதாக சிரிய அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஹமாஸ் இயக்கமும் இதர தீவிரவாத அமைப்புகளும் 150ற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களைக் கடத்திச் சென்று இருப்பதாகக் கூறப்படுகிறது.


காஸாவில் இஸ்ரேல் நடத்தும் ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதிலடியாக தான் கடத்தி வைத்திருப்போரில் ஒவ்வொருவராக கொன்றுவிடப்போவதாக ஹமாஸ் மிரட்டி இருக்கிறது. காஸாவில் இஸ்ரேல் தாக்குதலுக்குப் பயந்து 200,000ற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை விட்டு ஓடி இருக்கிறார்கள். இஸ்ரேலும் எகிப்தும் எல்லைகளைத் தடுத்து இருப்பதால் அவர்கள் காஸா பகுதியைவிட்டு வெளியேற முடியவில்லை. காஸாவுக்கு உணவு, எரிபொருள், மின்சாரம், மருந்து அனைத்தையும் இஸ்ரேல் முடக்கி இருக்கிறது. எகிப்தில் இருந்து காஸாவிற்கு அந்தப் பொருட்கள் வரவிருந்த வழியும் மூடப்பட்டுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

காஸா மீது தொடர்ந்து ஏவுகணைகளை வீசி வரும் இஸ்ரேல் காஸாவுக்குள் அடிப்படை தேவைகளான உணவு, மருந்து உள்ளிட்டவைகளை எடுத்துச் செல்வதை தடுத்துள்ளது. மின்சாரத்திற்கு தேவையான எரிபொருளையும் உள்ளே அனுமதிக்காததால் காஸா பகுதி முழுவதும் இருளில் மூழ்கியுள்ளது. இதற்கிடையே அத்தியாவசியப் பொருட்களை காஸாவிற்குள் அனுமதிக்க அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் எகிப்து அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் மீது ஏவுகணை வீசப்படுவது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.









போர் என்றால் எந்த அளவு ஆயுதங்கள் முக்கியமோ, அதே அளவுக்கு பணமும் தேவை. ஆயுதங்கள் வாங்க மட்டுமின்றி காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்யவும் அடுத்தடுத்த திட்டங்களை நிறைவேற்றவும் பணமே பிரதானம்.

எனவேதான் இஸ்ரேல் தாக்குதலை எதிர்கொள்ள ஏதுவாக, தங்களுக்கு தேவையான நிதியை கிரிப்டோகரன்சி முறையில் அனுப்புமாறு சமூக வலைதளங்கள் வழியாக ஹமாஸ் குழுவினர் கோரிக்கை விடுத்து வந்தனர். இதனை அறிந்த இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் சைபர் க்ரைம் தடுப்புப் பிரிவினர், ஹமாஸ் குழுவினருக்கு சொந்தமான கிரிப்டோகரன்சி கணக்குகளை முடக்கியுள்ளனர்.

இணையம் மூலம் பணபரிவர்த்தனை நடப்பதையும் தடுத்ததாகக் கூறும் இஸ்ரேல் அதிகாரிகள், 90 சதவிகித நிதி ஆதாரங்கள் முடக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளனர். முன்னதாக ஹமாஸ் அமைப்பின் பொருளாதார விவகாரங்களைக் கையாண்ட நிதி அமைச்சர் ஜவாத் அபு ஷமாலாவையும் ட்ரோன் தாக்குதல் மூலம் கொன்றதாக இஸ்ரேல் கூறியிருந்தது. காஸா பகுதியை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் அமைப்பினரின் 2021ஆம் ஆண்டு பட்ஜெட் 6611 கோடி ரூபாய் என கூறப்படுகிறது. அந்த அமைப்புக்கு நிதி உதவி செய்வதில் ஈரான் முதலிடத்தில் இருக்கிறது. எகிப்து, லெபனான், ஜோர்டான், ஆப்கானிஸ்தான், சவுதி அரேபியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள அமைப்புகள் ஹமாஸுக்கு நிதி உதவி செய்து வருகின்றன. பல நாடுகளிலுள்ள பாலஸ்தீனியர்கள் மற்றும் ஹமாஸின் கொள்கையை ஆதரிப்பவர்களும் உதவி செய்கின்றனர். மேற்கு ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்க நாடுகளில் நிதி உதவி வேண்டி நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதுதவிர, காஸா பகுதியில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரி வருவாயும் முக்கிய நிதி ஆதாரம். எனவேதான், ஹமாஸுக்கு எதிரான போரில் தாக்குதல் ஒருபுறம், அந்த அமைப்பினருக்கு வரும் நிதி ஆதாரங்களை முடக்குவது மறுபுறம் என தீவிரம் காட்டுகிறது இஸ்ரேல். ■

# நெருக்கடியான சூழ்நிலைகளில் கல்வி அறிமுகமாக சில வார்த்தைகள்

கரிகாலன், சிவபாத கலையகம், கிளிநொச்சி.

நெருக்கடிகள்தான் எப்போதும் மாற்று வழிகளின் புதிய போக்குகளுக்கு அத்திவாரமாகின்றன.

1990களில் இரண்டாம் கட்ட ஈழப்போர் தந்த நெருக்கடிகள் பல கிராமத்திலிருந்து விஞ்ஞானிகள் பலர் தோன்றிவரக் காரணங்களாகின.

ஜாம்போத்தல் விளக்கு, சைக்கிள் டைனமோவில் பாடல் கேட்டல், கார் பற்றி கொண்டு கறுப்பு வெள்ளை ரீவியில் படம் பார்த்தல், புற்றுமண் மற்றும் பனம்பழம் ஆகியவை சவர்க்காரமாக மாறியவை என்று ஏராளமாகச் சொல்லலாம்.

அவை போலவே, 2019 ஆம் ஆண்டில் உருவான கொரோனா அலை உலக மக்கள் மத்தியில் பேரவலத்தை உண்டுபண்ணிப் போனது. பல கோடி மனித உயிர்கள் மடிந்து போயின, பல துறைகள் பாதிக்கப்பட்டன, உலகப் பொருளாதாரம் அதல பாதாளம் வரை தாண்டு போனது. அதன் தாக்கம் இப்பவரை தொடர்கிறதையும் அவதானிக்கிறோம். அவற்றுடன் கல்விச் செயற்பாடுகள் மாண்டு போயின.

கல்விச் செயற்பாடுகள் வீட்டிலிருந்து கற்கவும் கற்பிக்கவும் புதிய புதிய வழிமுறைகள் உருவாகின.

இவ்வாறான சூழ்நிலையில் கல்வி எவ்வாறு செயற்பட்டது என்பதை சொல்லும் ஓர் ஆவணமாக கலாநிதி ஆ.நித்திலவர்ணன் எழுதிய ‘நெருக்கடியான சூழ்நிலைகளில் கல்வி’ எனும் இந்த நூல் வெளிவந்திருக்கிறது.

நூலாசிரியரின் தந்தை ஆனந்தமயில் நாடறிந்த மிகச் சிறந்த எழுத்தாளர். அவருடைய மகன் தனது துறை சார்ந்து நூல்களை எழுதி வருகிறார்.

தந்தையின் இலக்கியப் படைப்புகளை வாசகர்கள் எப்படி சுவைத்தார்களோ அவர்போலவே அவருடைய தனயன் கலாநிதி ஆ.நித்திலவர்ணனின் படைப்புகள் கல்விசார் பணியாளர்களை (ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப்பணிப்பாளர்கள்) ஆழ விரும்பிக் கற்க வைக்கின்றன.

இந்த நூலிலே நான்கு இயல்கள் உள்ளன.


(1) கொவிட்டும் கல்வியும்

(2) புதிய கல்வித் தேவைகள்

(3) சமகாலக் கல்வியும் பரீட்சைகளும்

(4) சமூகமாற்றமும் கல்வியும்

என நான்கு அலகுகளாக அவை வகுக்கப்பட்டு, ஒவ்வொரு அலகிற்கும் முறையே ஐந்து, ஐந்து, மூன்று, ஆறு என உப தலைப்புகள் இடப்பட்டு கட்டுரைகள் வலு நேர்த்தியாகத் தொகுக்கப்பட்டுள்ளன.




நூலாசிரியருக்கும் குடும்பம், தொழில், சமூகம், தன்னுடைய படிப்பு என பல நெருக்கடிகள் காணப்படுகின்றன.

முக்கியமாக, பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், கல்வி முதுமாணி கற்கைநெறிகளுக்கு யாழ்ப்பாணம், வவுனியா என இரண்டு நிலையங்களில் நான்கு தொகுதி மாணவர்களையும் அவர்களுக்கான விரிவுரையாளர்களை அமர்த்துவதும், தானும் விரிவுரைகளை நடாத்துவதும், தன் கற்றலைத் தொடர்வதும், தன் பிள்ளைகளை கண்காணிப்பதுமென பல நெருக்கடிகள் மத்தியில் இப்படியொரு கல்வித்துறை சார் படைப்பு வெளியிடுவது என்பது கல்விப்புலத்தில் ஒரு சாதனையாகவே பார்க்கிறேன். ■

---

## ஜனாதிபதித் தேர்தலுக்குத்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதில் சஜித் பிரேமதாஸாவை விட அநுரகுமார திசாநாயக்க முன்னிலை வகிப்பதை வெளிப்படையாகக் காணமுடிகின்றது. அடுத்து வரக்கூடிய மாதங்கள் இலங்கை அரசி யல் களத்தில் எத்தகைய மாற்றங்களை எற்படுத் தப் போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வெண்டியுள்ளது.

ஆனாலும் இருக்கும் கட்சிகளுக்கு அப்பால் புதிதாக சிலர்கூட ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயாராகி வருகின்றனர். இது வாக்குகளை சிதறடிக்கும் ஒரு நிலையையே தோற்று வந்து விடும். கடந்த காலங்களில் மிதக்கு வாங்கு வீதம் 30% ஆகவே, காணப்பட்டது. இப்போது பார்க்கும் போது அது 60 சதவீதத்தை எட்டுவதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் எந்தவொரு வேட் பாளரும் 51 சதவீதத்தை பெற முடியுமா? என்ற சந்தேகமே காணப்படுகின்றது. இதன் காரணமாக இரண்டாம் கட்ட வாக்கெடுப்பு ஒன்றிற்கு செல்லும் நிலை ஏற்படும் அது மட்டுமல்ல இன்று நாட்டு மக்கள் தேர்தலின் மீது நம்பிக்கை இழந்து வருவதைக்கூட அவதானிக்க முடிகிறது. சில வேளை செல்லுபடியற்ற வாக்குகளின் எண் ணிக்கை அதிகரிக்கவும் கூடும்.

இது இவ்விதமிருக்க தேர்தலொன்றிற்கு செல்லாமல் அரசியலமைப்பு விதியொன்றைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசாங்கமொன்றை உருவாக்கும் ஒரு முயற்சியிலும் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் ஒரு செய்தி பரவி வருகின்றது. சகல கட்சிகளையும் உள்வாங்கி இந்தத் தேசிய அரசை அமைத்துப் பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுத்த பின்னர் தேர்தலொன்றிற்கு செல்லலாம் என்ற எண்ணத்தில் மறைமுகமான பேச்சுக்கள் இடம் பெற்று வருவதாக அரசியல் அரங்கில் பேசப்ப டுகின்றது.

எது எவ்வாறாக இருந்த போதிலும் எதிர்வரும் மாதங்கள் விசித்திரமானதபாகவே அமையலாம். திடீர் அறிவிப்புக்கள் வெளியாகலாம். அதேசமயம் எதிர்ப்பலைகளும் அதிகரிக்கலாம். இதனை ஜனநாயக அமைப்பின் வெளிப்படையாக அரசியல் விமர்சனங்கள் விளக்கம் கூறலாம். திண்டாடப்போவது அப்பாவி மக்கள்தான். ■

---

## அரசியல் கட்சிகளின்...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இளைஞர்களுக்கு அடையாளமான புதிய சிந்தனைத் திறனோ, துடிப்போ, புதியன ஆக்கும் பண்போ, கூட்டுழைப்போ இல்லாமற் போய்விட்டது.

ஆகவேதான் கையறு நிலையின் வெளிப்பாடு இது என்ற நிலை வந்திருக்கிறது.

அப்படியல்ல, ஹர்த்தாலுக்கு இன்னும் மதிப்புண்டு என்றால், அதொரு வீரியமிக்க போராட்ட வடிவம்தான் என்றால் அதைப்போல இப்பொழுது பதவியிலிருக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக பதவியை ராஜினாமாச் செய்யலாம். அவர்களுடைய இடத்துக்குப் பதிலாக அடுத்த நிலையில் உள்ளவர்கள் உடனே முண்டியடித்து அந்தப் பதவியை ஏற்காமல் அவர்களும் அதை நிராகரிக்க வேண்டும். அரசு சார்ப்புக் கட்சிகளில் அல்லது சிங்களக் கட்சிகளில் போட்டியிட்டவர்கள் அந்த இடத்தை நிரப்புவார்கள் அல்லவா என்று நீங்கள் கேட்கலாம்.

வடக்கில் அநேகமாகப் போட்டியிட்டவர்கள் எல்லோரும் தமிழர்கள்தான். வன்னியில் முஸ்லிம்களும் சில சிங்கள வேட்பாளர்களும் உண்டு. ஆனால் அங்கயன், விஜயகலா தொடக்கம் இவர்கள் அனைவரும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குத் தாமும் ஆதரவு என்று சொல்வதுடன் விடுதலைப்புலிகளையும் தாம் ஆதரிப்பதாகப் பகிரங்கமாகவே சொல்லிக் கொண்டிருப்பவர்கள். ஆகவே இந்தச் சூழலில் இவர்களுடைய முகமூடிகள் அப்போது வெளிப்படும். அல்லது உண்மை நிலவரப்படி இவர்களும் நிராகரிப்புச் செய்து நெருக்கடியை உண்டாக்குவர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகினால், அதற்குப் பிறகு பட்டியலில் உள்ளவர்களும் பதவியை ஏற்காமல் விட்டால் என்ன நடக்கும் என்று சில நண்பர்கள் கேட்கிறார்கள். அப்படியிருந்தால், அவை வெற்றிடமாகும். இடைத்தேர்தல் பற்றி யோசிக்க வேண்டியிருக்கும். ஒப்பீட்டளவில் இந்தக் ஹர்த்தால், பேரணி, சிற்றணி போன்ற எதிர்ப்புகளை விட இது பெரிய எதிர்ப்பாக இருக்கும்.

இத்தகைய ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாக 1990 இல் ஈரோஸ் இயக்கத்தின் (ஈழவர் ஜனநாயக முன்னணியின்) 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியைத் துறந்திருந்தனர். அன்று அதொரு பெரிய வினையாக இருந்தது.

அப்படிச் செய்தாலும் ஒன்றும் நிகழப் போவதில்லை எனினும் எதிர்ப்பின் வடிவம் அது. இன்னும் சொன்னால், இந்தக் ஹர்த்தால் விளையாட்டை விட அது கொஞ்சம் கவர்ச்சியான விளையாட்டாக இருக்கும்.

ஒலகத்தின் புருவத்தைக் கொஞ்சம் ஒயர்த்த வெக்கும். ■

# இந்தியா – கனடா மோதல் விவகாரம்

பரந்துபட்ட இப்பூமிப்பந்திலே ஒவ்வொரு கணமும் பல்வேறுபட்ட மாறுதல்கள் உலகம் முழுவதும் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் உலகின் ஜி-7 நாடுகளில் ஒன்றான கனடாவிற்கும் ஆசிய நாடான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பட்டியலில் உள்ள இந்தியாவுக்கும் இடையே கடந்த சில காலமாகவே தொடர்ந்து மோதல் போக்கு நிலவி வருகிறது.

கனடாவில் காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை செய்யப்பட்டதில் இந்தியாவுக்குத் தொடர்பு இருந்ததாக அந்நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சொன்னதே இதற்குக் காரணமாகும். இந்தியா இதைத் திட்டவட்டமாக மறுக்கும் நிலையில், ஆதாரத்தை வெளியிடுமாறும் வலியுறுத்தியது.

இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் மாறி மாறி நடவடிக்கை எடுத்து வருகிறது. மறு அறிவிப்பு வரும் வரை கனடா நாட்டை சேர்ந்தோருக்கு விசா வழங்கப்படாது என இந்தியா அறிவித்துள்ளது. இதற்கிடையே அடுத்தகட்ட நடவடிக்கையாக சுமார் 40 தூதர்களைத் திரும்பப் பெறுமாறு கனடாவிடம் இந்தியா வலியுறுத்தியதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஒக்ரோபர் 10க்குப் பிறகு கனடா தூதர்கள் நாட்டில் தங்கியிருந்தால், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்து நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவுக்கு மொத்தம் 61 கனடா தூதர்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கையைக் குறைக்குமாறு இந்தியா வலியுறுத்தியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்தியா கனடா இடையே மோதல் போக்கு அடுத்த கட்டத்திற்குச் செல்வதை இது காட்டுவதாக உள்ளது. இது தொடர்பாகக் கனடா நாட்டின் செனட் குழுவின் தலைவர் பீட்டர் போஹும் கூறுகையில், “தூதர்களைத் திருப்பி அனுப்பும் விவகாரத்தில் நாம் கவனமாகச் செயல்பட வேண்டும். இந்த விவகாரத்தில் கனடாவை இந்தியா எளிய இலக்காகப் பார்க்கிறது.

கனடாவில் இப்போது சிறுபான்மை அரசு இருக்கும் நிலையில், அவர்களால் கடுமையான பதிலடி தரமுடியாது என்பதை இந்தியா அறிந்தே வைத்திருக்கிறது” என்று அவர் தெரிவித்தார்.



**சகாயதாசன் கிறிஸ்ரினா**
**ஊடகக்கற்கைகள் துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

இந்தியா- கனடா இடையே மோதல் ஆரம்பித்த போதே, இந்தியாவில் இருக்கும் கனடா தூதர்கள் செயல்கள் சந்தேகம் எழுப்பும் வகையில் இருப்ப தாக இந்தியா தெரிவித்து. மேலும், கனடாவில் இருக்கும் இந்தியா தூதர்களைக் காட்டிலும் கனடா நாட்டைச் சேர்ந்த தூதர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாகவும் இதில் ஒரு சமநிலை வேண்டும் என்று அப்போதே இந்தியா கூறியது குறிப்பிடத்தக்கது.

இது எவ்வாறாயினும் இந்த மோதல் நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி அமெரிக்கா தலையிட முற்பட்டுள்ளது, இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள இந்தியா முழு ஆதரவினை வழங்க வேண்டும் என கனேடிய பிரதமர் கூறியுள்ள நிலையில் இக்கருத்தினை அமெரிக்காவும் வலியுறுத்தியுள்ளது இரு நாடுகளுக்கிடையிலான உள்ளக முரண்பாட்டை தீர்க்க இரு நாடுகளும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் அமெரிக்காவின் தலையீடானது இவ் மோதல் நிலைமையினை திசை திருப்புவதாகவே அமைந்துள்ளது.

இருப்பினும் இந்திய- கனடா விவகாரத்தில் அமெரிக்கா மென்போக்கான வழிமுறைகளையே கையாண்டு வருகிறது ஏனெனில் சீனாவிற்குப் பதிலடி கொடுப்பதற்கு இந்தியாவின் ஆதரவு அமெரிக்காவிற்கு தேவையானதாகும் இதனாலேயே விசாரணைகளுக்கு ஆதரவு வழங்குமாறு மட்டுமே இந்தியாவை வலியுறுத்தி வருகிறது.

அந்தவகையில் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்துவது, கனடாவுக்கு மிகவும் முக்கியமானதாகும் என்று குறிப்பிட்டிருக்கும் ட்ரூடோ, உலக அரங்கில், இந்தியாவின் முக்கியத்துவம் வளர்ந்து வரும் நிலையில், அதனுடனான உறவின் முக்கியத்துவத்தை கனடா நன்கு அறிந்தே இருக்கிறது. கடந்த ஆண்டு இந்தோ-பசுபிக் கூட்டுக் கொள்கையை வெளியிட்ட நிலையில், அதனுடனான உறவில் நாங்கள் கவனத்துடன் இருக்கிறோம் என்றும், இந்தியாவுடன் நெருக்கமான உறவை மேம்படுத்துவதில் தீவிரமாக இருப்பதாகவும் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே, இருநாடுகளுக்கும் இடையிலான மோதலினை அந்த நாடுகளே தலையிட்டு தீர்வினை காண முற்பட வேண்டும் மாறாக அமெரிக்கா போன்ற நாடுகளில் தலையீட்டினால் மோதல் மேலும் வலுப்பெறுமே தவிர தீர்வினை நோக்கி நகராது என்பதே வெளிப்படை. ■

---

**சமரபாகு சி.உதயகுமார்**

# எனது புரிதல்*

கம்பராமாயணத்தை எழுதியவர், கம்பர்.

இராவணன் நிராயுதபாணியாக நிற்கிறான். அந்தக் கணத்தில் கம்பர் எழுதிய பாடல்.

‘ஆள் ஐயா! உனக்கு அமைந்தன
மாருதம் அறைந்த பூளை ஆயின
கண்டனை இன்று போய், போர்க்கு
நாளை வா’ என நல்கினன்-நாகு
இளங் கமுகின் வாளை தாவுறு
கோசல நாடுடை வள்ளல்’


இங்கே, ‘இன்று போய் போர்க்கு நாளை வா’ என்று, யார்? யாருக்கு? கூறியது என்ற கேள்விக்கு ‘இராமன் இராவணனுக்கு கூறியது’ என்று தானே விடை பகர்கிறோம்.

உண்மையில் இக்கூற்றை பொருத்தமான இடத்தில் இராமன் சொல்வதாகக் கூறியது கம்பர்தானே!

அது கம்பரின் மொழி அல்லவா? அப் பாத்திரங்கள் கம்பரின் உற்பவிப்பு அல்லவா?

கம்பரின் இலக்கியமொழி, கம்பரின் பாத்திர வார்ப்பு, காட்சிகளின் அழகியல் வர்ணனைகள் என எல்லாமே கம்பருக்கு சொந்தமானவை தானே..!

ஆனால், கம்பரை மறந்துவிட்டு கம்பராமாயணத்தில் ‘இன்ன பாத்திரம் இதை இப்படி சொன்னது’ என்று தானே பேசுகிறோம். டால்ஸ் டாய் கூறிய படைப்பை படைத்தவுடன் படைப்பாளி இறந்து விடுகிறான் என்பது ■



# கலை இலக்கிய வித்தகர் 'பாடும்மீன்'
# சு.ஸ்ரீகந்தராசாவின் வாழ்வும் பணிகளும்

முருகபூபதி

முதல் சந்திப்பு 44

'பாடும்மீன்' என்ற சொற்பதம் ஓர் அடையாளம். தண்ணீரில் மீன் அழுதால், அதன் கண்ணீரை யார் அறிவார்? எனக்கேட்பார்கள்! அதுபோன்று மீன்பாடுமா..? எனவும் கேட்பார்கள்!

மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து முழுமதி நாட்களில் செவிமடுத்தால், கீழே ஓடும் வாவியிலிருந்து எழும் ஓசையை கேட்கமுடியும். அதனை ஒலிப்பதிவுசெய்து இணையத்தில் பதிவேற்றியுள்ளனர்.

அருட்தந்தை லோங் அடிகளார் அந்த ஒலியை பதிவுசெய்து இலங்கை வானொலியில் ஒலிபரப்பினார்.

பாடும்மீன் என்ற பெயரில் இதழ்கள், விளையாட்டுக்கழகங்கள், சமூக அமைப்புகள் இருக்கும் அதேசமயம், அந்தப்பெயரையே முதல் எழுத்துக்களாக்கி இயங்கி வருபவர்தான் 'பாடும் மீன்' சு.ஸ்ரீகந்தராசா.

1991 ஆம் ஆண்டு ஒருநாள் எனது மெல்பன் வீட்டுக்கதவு தட்டப்பட்டது. கதவைத்திறந்தேன்.

நண்பர் தமிழரசன், தன்னோடு அழைத்து வந்திருந்தவரை எனக்கு அறிமுகப்படுத்தினார். தமிழரசனுடன் இலங்கையில் சட்டம் பயின்றவர்

திலும் அதன்பிறகு இலங்கை சட்டக்கல்லூரியிலும் இணைந்து சட்டத்தரணியானவர்.

இவர் கற்ற கல்லூரியில் வெளியான உயிர்ப்பு என்ற கையெழுத்து இதழின் ஆசிரியராகவிருந்தபோது இவரது வயது 14 என்பது வியப்பானது!



சிறுவயதுமுதலே பேச்சாற்றல், நடிப்பாற்றல், எழுத்தாற்றல் முதலான ஆளுமைப்பண்புகளுடன் வளர்ந்திருக்கும் 'பாடும்மீன்' சு.ஸ்ரீகந்தராசாவுக்கு களம் வழங்கி எழுத்தாளன் என்ற அடையாளத்தை உருவாக்கியது சிந்தாமணி வார இதழ்.

பத்திரிகை உலக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் பணியாற்றிய பத்திரிகைகள்தான் தினபதியும் சிந்தாமணியும்.

கிழக்கிலங்கையிலிருந்து எழுதத்தொடங்கிய சு.ஸ்ரீகந்தராசாவுக்கு தென்னிலங்கையிலும் எழுத்துப்பணியை தொடருவதற்கு களம் அமைத்துக்கொடுத்தது சிந்தாமணி. அத்துடன் தந்தை செல்வநாயகம் நடத்திய சுதந்திரன் பத்திரிகையிலும் ஊடகவிய

பெயர்ந்த பின்னரும் வற்றிப்போகச்செய்யாமல் இவர் வெளிப்படுத்தி வந்திருப்பதை அருகிருந்து பார்த்துவந்திருப்பதனாலும் இவருடன் இணைந்து சில பொதுப்பணிகளில் ஈடுபட்டதனாலும் இவர் பற்றி மேலும் அறிந்து கொள்ள முடிந்திருக்கிறது. அவுஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத்தில் தமிழ் அகதிகள் கழகம், ஈழத்தமிழ்ச்சங்கம், தமிழ் இலக்கிய கலைச்சங்கம் ஆகியனவற்றிலும் தலைவராகவிருந்த 'பாடும் மீன்' சு.ஸ்ரீகந்தராசா, இம்மாநிலத்தில் தமிழ் ஆர்வலர் மருத்துவர் பொன்.சத்தியநாதன் நடத்திய தமிழ் உலகம் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியிருப்பவர்.

அவுஸ்திரேலியாவில் ஒலிக்கும் பல வானொலிகளிலும் இவரது உரைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களையும் தமிழ்த்திரையிசைக்கு உயிர்ப்பளித்த கவிஞர்களின் பாடல் வரிகளையும் இணைத்து ஒலிச்சித்திரங்களையும் வழங்கியிருக்கிறார்.

எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையின் பிரபல நாடகமான 'வலை' இவரது இயக்கத்தில்

அவர் 'இவர்தான் பாடும் மீன் ஸ்ரீகந்தராசா' என்றார்.

முன்னர் கேள்விப்பட்ட பெயராக இருந்தது. அன்றைய கலந்துரையாடலில் அவரிடம் உள்ளார்ந்த கலை, இலக்கிய ஆற்றல் நிரம்பியிருப்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

அக்காலப்பகுதியில் நாம் நடத்திய தமிழர் ஒன்றியத்தின் முத்தமிழ்விழாவிற்காக நாவன்மைப் போட்டிகளை நடத்தினோம். அதற்கு நடுவராக வருகை தந்து போட்டிகளில் பங்குபற்றுபவர்களை தெரிவுசெய்து தரமுடியுமா? எனக்கேட்டேன். 'பாடும் மீன்' சு.ஸ்ரீகந்தராசா சம்மதித்தார். போட்டி முடிந்ததும் நாவன்மைப் போட்டிகளுக்கு தயாராவதற்கு முன்னர் எத்தகைய பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆலோசனைகளை விரிவுரையாகவே வழங்கினார்.

'தீம்புனல்' இதழில் தொடர்ந்தும் குறள் இன்பம் பற்றி எழுதிக் கொண்டிருக்கும் படைப்பாளி பற்றித்தான் இந்த அங்கத்தில் குறிப்பிடுவதற்கு முன்வந்துள்ளேன்.

'பாடும் மீன்' சு.ஸ்ரீகந்தராசா அவர்களுக்கு இம்மாதம் 1 ஆம் திகதி 70 ஆவது பிறந்த தினம். இந்தத்தினத்தை அவரது குடும்பத்தினர் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு தயாராகியிருக்கும் இவ்வேளையில் அவரை வாழ்த்திக் கொண்டே இந்தப்பத்தியை தொடருகின்றேன்.

உள்ளார்ந்த ஆற்றல் மிக்கவர்கள் எங்கிருந்தாலும் இயங்குவார்கள். அவ்வாறு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அவுஸ்திரேலியாவில் கலை, இலக்கியம், வானொலி, இதழியல், சமூக அமைப்புகள் தொடர்பான பணிகளில் இயங்கிவருபவர் மீன் பாடும்தேனாட்டின் பிரதி நிதியான சட்டத்தரணி 'பாடும்மீன்' சு.ஸ்ரீகந்தராசா.

பாடசாலைப்பருவத்திலேயே இலக்கியப் பணியை ஆரம்பித்தவர். அரைநூற்றாண்டு காலமாக எழுத்தூழியத்தில் ஈடுபட்டு வருபவர். களுவாஞ்சிக்குடியில் சுப்பையாபிள்ளை - சின்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரனான சு.ஸ்ரீகந்தராசா, தனது கல்வியை பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம், மட்டக்களப்பு இந்துக்கல்லூரி ஆகியவற்றில் தொடர்ந்த பின்னர், கொழும்பு பல்கலைக்கழகத்

லாளராக பணியாற்றியிருக்கிறார்.

தொடக்கத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் இணைந்திருந்தாலும் பின்னர் சட்டத்தரணியானதும் கிழக்கிலங்கை நீதிமன்றங்களில் பணியாற்றினார். கவிதை, சிறுகதை, விமர்சனம், பத்தி எழுத்துகள், ஆய்வு, நாடகம், வில்லிசை முதலான துறைகளிலும் அகலக்கால் பதித்து பல்துறை விற்பன்னராக விளங்கியிருக்கும் இவர், மேடை நாடகங்களிலும் புகழ் பெற்றிருப்பவர். கவிதை இயற்றுவதிலும் மெல்லிசைப்பாடல்கள் புனைவதிலும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்பவர்.




இளம்பருவத்திலேயே நாடகம் எழுதி இயக்கி மேடையேற்றியவர். களுவாஞ்சிக்குடியில் நூலகம் இல்லாத குறையை போக்குவதற்காக நண்பர்களுடன் இணைந்து நூலகம் அமைத்தமை, இளைஞர்களை இணைத்து இளம் நாடக மன்றம் அமைத்து கிராமங்கள்தோறும் நாடகங்களை அரங்காற்றுகை செய்தமை, வில்லுப்பாட்டுக்களை இயற்றி பொது மேடைகளில் அரங்கேற்றியமை, மட்டக்களப்பின் நாட்டார் பாடல்களுக்கு நாடகவடிவம் வழங்கி மக்களிடம் அரங்கங்கள் வாயிலாக எடுத்துச் சென்றமை, உட்பட பல்வேறு கலை, இலக்கிய பணிகளில் தீவிரமாக செயற்பட்டிருக்கும் இவர், அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த பின்னரும் அயராமல் இயங்கிவருகிறார்.

தனது உள்ளார்ந்த ஆற்றல்களை புலம்

மெல்பனில் மேடையேற்றப்பட்டதைப் பார்த்து வியந்திருக்கின்றேன். அதனை இவர் நெறிப்படுத்தியிருந்த பாங்கும் ஒலி, ஒளி, அரங்கநிர்மாணம் என்பனவும் மறக்க முடியாத நிகழ்வாக மனதில் நிலைத்திருக்கிறது.

பல்வேறு விருதுகளையும் பெற்றிருக்கும் 'பாடும்மீன்' சு.ஸ்ரீகந்தராசாவின் மணிவிழாக்காலத்தில், ஞானம் இதழ் அட்டைப்பட அதிதியாக பாராட்டி இவரது சேவைகளைப் பதிவுசெய்துள்ளது.

விக்ரோறிய மாநிலத்தில் பல்கலைக்கழகப் புதுமுகத் தேர்வுக்கான 12 ஆம் வகுப்புப் பாடத்திட்டத்தில் தமிழ் மொழி ஒரு பாடமாகச் சேர்க்கப்படுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுள் இவரும் ஒருவர்.

சிட்னியில் இருந்து இயங்கும் அவுஸ்திரேலிய தமிழ் பட்டதாரிகள் சங்கத்தினால் தேசியப் பரீட்சகர்களில் ஒருவராக நியமிக்கப்பட்ட இவர், இச்சங்கத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் தமிழ் மாணவர்களுக்கான தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளுக்கு மேற்பார்வையாளராகவும் தமிழ் மாணவர்களுக்கு தமிழ்ப்பேச்சுக்கலையில் பயிற்சி கொடுத்து, போட்டிகளுக்குத் தயார் செய்து வரும்பணியிலும் ஈடுபட்டு வருமிவர் எழுதியிருக்கும் நூல்கள்: சந்ததிச் சுவடுகள், மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள், தமிழினமே தாயகமே, தமிழின் பெருமையும் தமிழரின் உரிமையும் ஓர் அவுஸ்திரேலிய ஈழத்தமிழரின் இந்தியப்பயணம், Sankam Period and Sankam Literature (சங்ககாலமும், சங்க இலக்கியங்களும் - ஆங்கில மொழிபெயர்ப்பு)

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் உரைச்சித்திர இறுவட்டையும் வெளியிட்டுள்ளார்.

விரைவில், இவரது சிறுகதைத் தொகுதியும் சங்க இலக்கிய காட்சிகள் என்ற ஆய்வு நூலும் வெளிவரவிருக்கிறது. ■

அந்த ஞாயிற்றுக்கிழமையும் அழகாக விடிந்தது. அதிகாலையில் எழுந்தே பரபரப்பாக தயாரான அருண்யாவை சந்திர ஹாசனும் கவின் யாவும் மகிழ்ச்சியாகப் பார்த்தனர்.

ஒன்பது வருடங்களாக வீட்டுக்குள்ளேயே முடங்கி இருந்தவள் இப்போது தன் அஞ்ஞாத வாசம் கழித்து வெளியே வர சம்மதித்து இருப்பது என்பது சும்மாவா?

முதல் நாள் இரவே தன் கையாலேயே தட்டவடையும் முறுக்கும் மில்க் ரொபியும் செய்து உரியவாறு பார்சல் செய்து வைத்து விட்டாள். அதோடு சர்பத்தும் செய்து குளிர்சாதனப் பெட்டியில் பதப்படுத்தியிருந்தவள் ஸாமிடம் குளிர் போகாமல் காக்கும் ஐஸ் பெட்டிகள் கொண்டு வரச் சொல்லி இருந்தாள்.

காலை ஒன்பது மணியளவில் வான் வந்து கோர்ன் அடிக்க உணவுப் பொருட்களை ஏற்றி விட்டு தாய், தகப்பனிடம் விடைபெற்றுக்

# இரு மலர்கள்

**தொடர்கதை**

யாழ் சத்யா

மலர் 47

கொண்டு இவளும் ஏறி அமர்ந்து கொண்டாள்.

எல்லோரது மனைவி, பிள்ளைகளும் வந்திருக்க அங்கே கலகலப்புக்கு பஞ்சமில்லை. பாட்டும் கூத்தும் கேலியுமாய் அந்த ஒன்றரை மணி நேரப் பிரயாணம் மிக அற்புதமாய் சென்றது.

ஜன்னல் கரையோரமாக அமர்ந்து கொண்ட அருண்யாவோ இவர்கள் கேலிகளுக்குக் காது கொடுத்துக் கொண்டிருந்தாலும் வெளியே பார்ப்பதிலேயே ஆர்வமாக இருந்தாள்.

பத்து வருட மாற்றம் என்பது இலேசானது இல்லையே. அதுவும் நீண்ட கொடிய யுத்தத்தின் பின்னர் வந்த மாற்றம். புது இடத்திற்கு பிரயாணிக்கும் சிறு குழந்தையாய் ஜன்னல் கண்ணாடியை ஒதுக்கி விட்டு மெல்லிய இளங்காற்று முகத்திலே மோதி முடியைக் கலைக்க ஆனந்தமாய் அதை ரசித்துக் கொண்டு வெளியே வாய் பார்த்துக் கொண்டு வந்தாள்.

மினிபஸ்ஸின் வாயிலால் ஏறியவுடன் இருந்த முன்னிருக்கையில் சுதர்சனின் மனைவி பக்கத்தில் அருண்யா அமர்ந்திருக்க ஓட்டுநரின் பக்கத்து இருக்கையில் உள் புறம் எல்லோரையும் பார்த்தவாறு அமர்ந்திருந்தான் ஸாம். ஸாமின் பக்கத்தில் நிரோஜன் இருக்க, சுதனும் சுதர்சனும் நின்று கொண்டிருந்தார்கள். பெண்கள், குழந்தைகள் எல்லோரும் தாங்கள் விரும்பியபடி பிடித்தவர்கள் பக்கத்தில் இருந்து அரட்டையில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஸாம் அருண்யாவைக் கண்காணிக்க என்றே அந்த இருக்கையில் இருந்தவன் அடிக்கொரு தரம் அவள் முகபாவனைகளைக் கவனிக்கத் தவறவில்லை.

சந்திரஹாசன் மகள் இந்தியாவில் படிப்பதாகவும் பின்னர் அங்கேயே வேலை பார்ப்பதாகவும் வெளியே சொல்லி வைத்திருந்தார். எந்தத் தகப்பனால்தான் தன் மகள் மானபங்கப்படுத்தப்பட்டு விட்டதையும் அதன் பாதிப்பாய் வீட்டிலே ஒடுங்கி விட்டதையும் வெளியே சொல்ல முடியும்.

ஊரவரும் அதை நம்பி ஏற்றிருக்க ஸாமின் நண்பர்களும் அப்படியேதான் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

"ஹேய்... அருணி... ஏழெட்டு வருசத்துக்குப் பிறகு ஊருக்கு வந்திருக்கிறீரென்ன... யாழ்ப்பாணம் எப்பிடி இருக்குது...? டேய் ஸாம்... நீயும் சொல்லடா... நீயும் பத்து வருசம் கழிச்சுப் பாக்கிறாய் நம்ம ஊரை..."

சுதன் இவ்வாறு கேட்டதும் சுதர்சன் தன் மகளின் வட்டத் தொப்பியை உருட்டிக் குழல் போலே செய்து அதை மைக் மாதிரி பிடித்துக் கொண்டு ஒரு தொகுப்பாளரின் பாவனையுடன் தனது கலாட்டாவை ஆரம்பித்தான்.

"வணக்கம் ரசிகப் பெருமக்களே...! இது உங்கள் வின் ரீவியின் ஊர்பார்ப்போமா... நாங்கள் இப்போது பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, குஞ்சர் கடை, கரணவாய் தாண்டி வல்லைப் பாலத்தை அடைந்துள்ளோம்.

இரு புறமும் கடல் நடுவிலே வாகனம் போகுமளவு அகலத்தில் ஒரு பாலம். தசாப்தங்களின் முன்னர் தகர்க்கப்பட்டாலும் பின் மீண்டும் புணரமைக்கப்பட்டு வடமராட்சியையும் வலிகாமத்தையும் இணைக்கும் அற்புதபாலம் இது.

மேலே வானம், அதிலே ஊர்வலம் போகும் மேகக் கூட்டங்கள், கீழே நீலக் கடல் அதிலே மீன்



பிடிக்கும் வெள்ளைக் கொக்குகள்... ஆஹா என்ன ஒரு அற்புதமான காட்சி... நூற்றுக் கணக்கான நீர்க் காகங்கள் தாங்களாகவே ஒரு கோலம் அமைத்து பறக்கும் இந்தக் காட்சியை என்னவென்று சொல்வது...

ஒரே நேரத்தில் கடலிலிருந்து வானை நோக்கிச் சிறகடித்துப் பறக்கும் இந்த வெள்ளைக் கொக்குகளைப் பாருங்கள் மக்களே... என்ன அழகு... இறைவனின் படைப்பின் விந்தையை வியக்க வார்த்தைகள் போதவில்லையே...."

ஒரு தொலைக்காட்சி வர்ணனையாளரின் தொனியில் ஒரு நேரடி வர்ணனையை உரிய முக பாவங்களோடு வழங்க அனைவரும் கை தட்டி ரசித்தனர்.

இப்போது சுதர்சனின் கையிலிருந்த மைக்கை நிரோஜனின் மனைவி வாங்கிக் கொண்டாள்.

"வின்னின் சொந்தங்களே இப்போது ஊர்பார்ப்போமாவில் சில சுற்றுலாப் பயணிகளைச் சந்திக்கும் நேரம்... பத்து வருடங்களுக்கு முன்பு தாய் மண்ணைப் பிரிந்து சென்ற திரு.ஸாம் அபிஷேக் இப்போது எங்களோடு இணைந்துள்ளார்... யாழ்ப்பாணத்தின் மாற்றங்கள் பற்றி இப்போது அவர் தனது அனுபவங்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளுவார்...."

ஸாம் இருந்த இருக்கைக்கு நேராகச் சென்று அவனிடம் மைக்கை நீட்டினாள். பிகு இன்றி மைக்கை வாங்கிக் கொண்ட ஸாம் தொண்டையைக் கனைத்துக் கொண்டே ஆரம்பித்தான்.

"எல்லோருக்கும் வணக்கம். நான் வீடு வந்த போது எங்கள் ஊரா? இது என்று வியந்து விட்டேன். குன்றும் குழியுமாக இருந்த வீதிகள் எல்லாம் கார்ப்பெட் ரோடாக மாற்றமடைந்திருக்கின்றன. எங்கும் பல புதிய கட்டடங்கள். பருத்தித்துறை, நெல்லியடி போன்ற சிறு நகரங்களில்கூட பல புதிய கடைகளும் வங்கிகளும் நிதி நிறுவனங்களும் திறக்கப்பட்டு உள்ளன.

யாழ் நகரம் பற்றிச் சொல்லவே தேவையில்லை. தியேட்டர்கள், கே.எப்.சியுடன் கூடிய வணிக வளாகம். நிறைய கட்டடங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலை... கால் வைக்க இடமில்லாமல் தெருவோரம் எங்கும் நடைபாதைக் கடைகள், வீதியெங்கும் திருவிழா மாதிரி சன நடமாட்டம், தமிழுக்கு சரிசமனாக காதில் விழும் சிங்களக்குரல்கள். இது நம்ம யாழ்ப்பாணம் தானா? என்று நம்பவே முடியவில்லையே..."

ஸாம் பேசி முடித்ததும் எல்லோரும் "பட பட" என்று கை தட்டினார்கள்.

இப்போது மைக் அருண்யாவிடம் கொடுக்கப்பட்டது. என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்தவள்,

"ஸாம் சேர் சொன்னவைதான் என் கருத்தும்.. நிறைய மாற்றங்கள்... எல்லா இடங்களும் மாறிவிட்டன... வீதியில் இருந்து கட்டடங்கள் வரை எல்லாம் புதிதாய் இருக்கிறது..."

சொல்லி விட்டு மைக்கை யாரிடம் கொடுப்பது என்று பார்க்க சுதர்சன் சொன்னான்,

"என்ன அருணி... உன் ஸ்டைலில் ஏதாவது சொல்லுவாய் என்று பார்க்க இப்பிடி முடிச்சிட்டியே...."

மெல்லிய புன்னகையுடன் மைக்கை அருகிருந்தவளிடம் கொடுத்தவள் ஏதோ நினைவு வந்தவளாக திரும்ப வாங்கினாள்.

"கட்டடங்கள் மட்டுமல்ல மனிதர்களும் நிறைய மாறி விட்டார்கள்.... பத்து வருடங்கள் முன்பு பார்த்த போது ஆணழகன் போட்டிக்குப் போவது போல் இருந்தவர்கள் எல்லோரும் இப்போது முன்னால் ஒரு பானையை சுமந்து கொண்டிருக்கிறார்கள்...

அவரது பிரக்னென்ட் மனைவியின் ஏழு மாத வயிறு பெரிதா? அல்லது அவரது தொப்பை பெரிதா? என்று பட்டிமன்றமே நடத்தலாம் போலுள்ளது.

**(மலரும்....)**



சிறுகதை

# என் ராஜா

அபிராமி துர்காதாஸ்

'அம்மா' என்று கூப்பிட்டவாறு தயங்கியபடி வந்தான் ராஜா. இரும்பு வாணலியிலிருந்த வடைகளைத் திருப்பியவாறே மகனை நோக்கினாள் ஜானகி அம்மாள். சதா அடுப்படியில் வேலை செய்து ஒடுங்கிய அவளின் உருவமும் விதவைக் கோலமும் ராஜாவின் மனத்தை வருத்தின.

"நாளைக்கு எங்க ஸ்கூல்ல கண்காட்சிக்கு அழைத்துக்கொண்டு போறாங்கம்மா! நானும் போகட்டுமா?"

"நமக்கு எதுக்குடா அதெல்லாம்?"

"காசுகூட வேண்டாம்மா. நடந்து தாம்மாபோகப்போறோம்."

"சரி, சரி... நாளைக்குத்தானே?" அம்மா அடுப்பைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

கண்காட்சியில் ஏதாவது தின்பண்டம் வாங்கிக் கொள்வதாக இருந்தால், காசு கொண்டு வரச் சொல்லியிருந்தார் உபாத்தியாயர்.

ராஜாவுக்குத் தெரியும், அம்மா படும் கஷ்டங்கள். தினம் காலை, மாலை இரு நேரமும் இட்லி, வடை செய்து கூடையில் அடுக்கி வைத்து விடுவாள். ராஜாதான் அவற்றை வாடிக்கைக்காரர்கள் வீட்டில் கொடுத்துக் காசு வாங்கி வருவான். மறு நாளைய வியாபாரத்துக்குச் சாமான்கள் வாங்கியது போக, பாக்கி காசில் இருவரும் காலத்தை ஓட்டி வந்தனர். அப்படி இருக்க, அம்மாவிடம் எப்படிக் காசு கேட்பான்? கண்காட்சிக்குச் செல்ல அனுமதி தந்ததே பெரிய காரியம்!

திடீரென்று ராஜாவுக்கு ஞாபகம் வந்தது. வாத்தியார் எல்லோரையும் சுத்தமான உடை உடுத்தி வரச் சொல்லியிருக்கிறாரே?

உடம்பிலிருந்த சட்டையைக் கழற்றி எடுத்துக்கொண்டு, தேய்ந்து போன சிறு சோப்புக் கட்டியுடன் குழாயடிக்கு ஓடினான் ராஜா.

இருபத்தைந்து ஒண்டுக் குடித்தனங்களுக்கு ஏகபோகமான குழாயடி, பளிச்சென்று தேய்த்து வைத்த குடங்களும் புளி அப்பிய அண்டாக்களும் அழுக்குத் துணி சுமந்த வாளிகளும் அதன் தன் உரிமையாளர்களுமாக கோலாகலமாகக் காட்சி அளித்தது. இந்த வைபவத்தில் கலந்து கொள்ள விரும்பாத ராஜா, தெருக் குழாயை நோக்கி ஓடினான்.

"அம்மா, போய் வருகிறேன். திரும்பிவர நேரமாகும். கவலைப் படாதே!" "சரி, ஜாக்கிரதையாகப் போயிட்டு வா! இந்த நாலணாவை வைச்சுக்கோ. ஏதாவது வாங்கிச் சாப்பிடு." அம்மா இடுப்பிலிருந்து காசை எடுத்துக் கொடுத்தாள்.

ராஜாவுக்கு வயது பத்துதான். ஆனாலும் வீட்டுப் பொருளாதார நிலையை நன்கு உணர்வான். 'நாலணா காசு நாளைய இட்லி வியாபாரத்தை எப்படிப் பாதிக்கும்' என்பது அவனுக்குத் தெரியும்.

"காசு வேண்டாம்மா! நாலணாவுக்குத் தேங் காயும் பொட்டுக் கடலையும் வாங்கினால், நாளைக்கு இட்லிக்கு வியஞ்சனம் ஆகுமே!"

"போதும்டா, நூத்துக் கிழவன் மாதிரி பேசிக் கொண்டு..." அம்மா அவன் நிஜார் பையில் காசைப் போட்டாள்.

அலுமாரியிலிருந்த உடைசல் கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டான் ராஜா.

"அம்மா, நான் இப்ப எப்படி இருக்கேன்?"

"ராஜா மாதிரி இருக்கேடா!" ஜானகி பெருமூச்சு விட்டாள்.

"டேய், நாலு நாலு பேரா சேர்ந்து வரிசையா போங்கடா..." வாத்தியார் உத்தரவு கொடுத்தார்.

கண்காட்சி மைதானம் வண்ண வண்ண ஒளி விளக்குகளால் திகழ்ந்தது. பையன்களுக்குப் பாட சம்பந்தமுள்ள சில பகுதிகளைக் காட்டிய பின், எல்லோரையும் விளையாட்டுப் பகுதிக்கு அழைத்து வந்தார் வாத்தியார்.

"டேய், ரங்கராட்டினம் ஏறி சுத்துறவங்க எல்லோரும் சுத்துங்கடா" வாத்தியார் சற்று நிம்மதியாக உட்கார்ந்தார்.

"அணாவுக்கு ஆறு சுத்து சுத்தலாம்! வாங்க தம்பிமாரே, வாங்க!"

ராட்டினக்காரன் பாடிக்கொண்டு இருந்தான். 'நான் குதிரை ஏறுவேன்', 'நான் யானை மேல்...' என்று கூவியபடி எல்லோரும் ஓடினர். ராஜாவுக்கும் ஏறிச் சுற்ற ஆசைதான். ராட்டினத்தில் சுற்றினால் ஏரோப்ளேனில் பறக்கிற மாதிரி இருக்கும். ஆனால், அதற்கு ஒரு அணா செலவாகி விடுமே?

சேச்சே, அம்மா பாவம்! இந்த நாலு அணாவையும் அம்மாவிடம் அப்படியே கொடுத்து விடவேண்டும்.

"ராஜா நீ சுற்றலையாடா?" வாத்தியார் கேட்டார். "ராட்டினத்திலே ஏறினாலே எனக்குத் தலை சுத்தி, வாந்தி வரும் சார்."

எவ்வளவு சாமர்த்தியமாகப் பதில் சொல்லி விட்டோம் என்று தன்னைத் தானே மெச்சிக் கொண்டான் ராஜா.

"டேய்... ஐஸ்கிரீம் டோய்!" எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர்.

எப்போதும் ஸ்கூல் வாசலில் நிற்குமே, அதே சிவப்பு வண்டி! ராஜா அந்த வண்டியைப் பார்த்திருக்கிறானே தவிர, ஐஸ்கிரீமைப் பார்த்ததோ, சாப்பிட்டதோ கிடையாது.

அவன்தான் ஸ்கூல் விட்டதும் ஓடி விடுவானே, வீட்டுக்கு! பள்ளி இடை நேரத்தில், அம்மா தயாரித்த இட்லி, வடை, சில சிற்றுண்டிகளை வாடிக்கைக்காரர்களுக்குக் கொண்டு போய்க் கொடுக்கவேண்டுமே!

இதோ... குமார் அதை வாங்கி, மேலே சுற்றியுள்ள பேப்பரைப் பிரித்து, வெள்ளை ஐஸ்கிரீமை நாவால் ருசிக்கிறான். அது கரைந்து அவன் வாயெல்லாம் பால் குளமாகிறது.

ராஜா தன் வாயில் ஊறிய எச்சிலை விழுங்கிக் கொண்டான்.

"டேய், எப்படிடா இருக்கு?"

"நீயும் வாங்கி சாப்பிடேண்டா! ஜில்லுனு ஜோரா இருக்கு. ரெண்டணாதான்!"

இரண்டணாவா! ராஜாவுக்கு 'திக்'கென்றது. குமார் பூராவையும் வழித்துச் சாப்பிட்டுவிட்டு, அந்தக் காகிதத்தையும் அல்லவா மென்று துப்புகிறான்?

"நீ வாங்கலையா ராஜா? உங்க அம்மாதான் காசு கொடுத்திருக்காங்களே?"

தான் பெற்ற சுவையை, தன் நண்பனும் பெற வேண்டும் என்பது குமாரின் ஆசை.

ஆனால், ராஜா சமாளித்துக் கொண்டு விட்டான்.

"வேண்டாம்டா, ஐஸ்கிரீம் சாப்பிட்டால் எனக்குத் தொண்டை கட்டிக்கும்."

எல்லோரும் விளையாட்டு ரயிலில் ஏறிச் சுற்றினார்கள். ராஜா மட்டும் ஏறவில்லை.

எதற்கும் காசு என்றால், என்னதான் செய்வான்?

"சரி, நேரமாகிவிட்டது! எல்லோரும் கிளம்புங்கள். கடைகளை வேடிக்கை பார்த்தவாறே வீடு திரும்புவோம்" என்றார் வாத்தியார்.

அப்பப்பா! எத்தனை விதமான சாமான்கள், எத்தனை ரக விளையாட்டுக் கருவிகள்! ஒவ்வொன்றையும் திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டே வந்தான் ராஜா.

"இந்தக் கடிகாரம் நல்லா இருக்குடா. அசல் கடிகாரம் கெட்டது!" மாதுதான் கத்தினான்.

கடிகாரம் நன்றாகத்தான் இருந்தது. விளையாட்டு கடிகாரம் மாதிரி முட்களும் ஒரே இடத்தில் இருக்காமல் சுற்ற முடிந்தது. விலை நாலணாதான்.

ராஜாவுக்கு அதை வாங்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது. மாதுதான் முதலில் கடிகாரம் வாங்கினான். அவனைத் தொடர்ந்து ரவி, குமார், கிட்டு, ராமு எல்லோரும் வாங்கினார்கள்.

"ராஜா நீ வாங்கலையாடா?"

"எங்க அம்மா எனக்கு நிஜக் கடிகாரமே வாங்கித் தருவாடா!"

"அவங்க அம்மா இட்லி வியாபாரம் செய்யறாங்க. நிஜக் கடிகாரம் எப்படி வாங்கிக் கொடுக்க முடியும்? கதை அளக்கிறான் டோய்!" இது மாது.

தினம் மாதுவின் வீட்டுக்கு இட்லி, வடை கொண்டு கொடுப்பான் ராஜா. இல்லாவிட்டால் மாதுவுக்கு எப்படித் தெரியும்?

ராஜாவுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது.

"தினம் நான் எப்போ இட்லி, வடை கொண்டு வருவேன்னு காத்துக்கொண்டு இருப்பாயே? எங்கம்மா செய்து தராவிட்டால் நீ பட்டினிதானே கிடக்கணும்?"

ராஜாவின் இந்தச் சவாலுக்கு மாதுவால் பதில் சொல்ல முடியவில்லை.

எல்லோரும் கண்காட்சி மைதானத்தை விட்டு வெளியே வந்தனர். தெருவெல்லாம் ஒரே சன நெரிசல். நடை பாதை பூராவும் கடைகள்.

"எது எடுத்தாலும் நாலணா!" ஒரு கடைக்காரன் கூவிக்கொண்டிருந்தான். ராஜா அந்தக் கடையின் முன் நின்றுவிட்டான். அவன் கவனத்தைக் கவர்ந்தது ஒரு பொருள். நிஜார் பையிலிருந்த நாலணாவை எடுத்துக் கடைக்காரனிடம் கொடுத்து விட்டு, அதை வாங்கிக் கொண்டு திரும்பினான் ராஜா. அவன் மனம் சந்தோஷத்தில் துள்ளியது.

'அம்மோவ்' என்று கையைப் பின்னால் மறைத்தபடி வந்து நின்றான் ராஜா.

"முகமெல்லாம் ஏன் வாடி இருக்கு? ஒன்றுமே சாப்பிடவில்லையா நீ?"

"அம்மா, உனக்காக ஒரு சாமான் வாங்கி வந்திருக்கேன். என்னவென்று சொல், பார்க்கலாம்" என்றான் ராஜா.

"எனக்கா? என்னடா அது?"

"இதோ, இதுதான்" அரிசட்டுவத்தை எடுத்து அம்மா முன் நீட்டினான் ராஜா.

"இதை எதுக்கு வாங்கி வந்தே, நீ ஒன்றும் வாங்கித் தின்னாமல்?"

"இல்லேம்மா, நீ வடையை எண்ணெயிலேர்ந்து அரித்து எடுக்கிற சட்டுவக்காம்பு உடைஞ்சு போயிட்டது இல்லையா? அந்த உடைசல் கரண்டியாலே நீ எத்தனை தரம் கையை சுட்டுக்கொண்டு இருக்கே! உன் கையெல்லாம் எப்படிக் கொப்பளித்து போயிடுத்து! அதுக்காகத் தாம்மா வாங்கினேன்." தொண்டை கமறச் சொன்னான் ராஜா.

அடடே! அம்மாவின் கண்களில் ஏன் நீர் வழிகிறது? அம்மா தன்னைக் கட்டிக்கொண்டு, இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிடு கிறாளே, ஏன்?

ராஜா குழம்பினான்.

முற்றும்...



# மங்கை போலிங்கே

நெடு நீளக் கடல்
தொடு வானம் நீலம்
படுவனமும் மணலாக
மழை வந்து வீழாதோ?

மங்கை உந்தன்
கொங்கை வழி சுரந்து
பசியாற்றும் பாலது
மேகமது சுரக்காதோ?

நிலம் உலர்ந்தது
பாளமாகித் தான்
பிளந்திட வெடிக்கிறது
பின் குதிப்பாதம் போல

தோல் வரன்டு காய
கறுத்த மேனி அவன்
கறுத்துப் போனான்
என் விவசாய தோழன்

பார் மிதித்து அந்த
விவசாயத் தோழி
தன் பாதம் தேய்ந்து
பளிச்சிட நடப்பாளிங்கே

பாலின பேதமில்லை
தோள் கொடுத்துதவி
பயிர் விளைச்சலுக்கு
மண் பதமாக்கி விதைத்தார்

வானம் கறுத்தது
மாரி பொழிந்தால்
பொலியது பெருகி
கழியது உணவாகிடும்

கடல் கொதித்து சேர
ஒடுங்கியது முகிலாகி
முகம் கறுத்து அழும்
குழந்தை போல பொழியும்

நிலைமாறி முகமது
ஒளிவீசி மின்னிட
மண் மணம் வீசி
பெண் மனமாகிடும்

பாலையும் வனமாக
பசுமையாகிப் போகும்.
பாசம் நிறைந்த உறவது
உறவாடி மகிழக் கூடும்

வானும் மண்ணும்
பெண்ணும் ஆணும்
போல இருந்தாலிங்கே
மனை போலாகும் புவியும்.

✍ நதுநசி

---

# ஒப்பிடாதே

பரம்பரையலகு முதல்
கடந்துவந்த பரம்பரை
வரை ஒவ்வொருவரும்
ஒவ்வொரு விதம்

ஏன் பிறரை
உனக்கு நீயே

✍ சனா



நீ பிறருக்கோ
பிறர் உனக்கோ
ஒப்பிடல் சரிதானோ

ஒவ்வொருவரும் வானத்து
நிலா போல் நமக்கு
நாம் சிறந்தவர்

உன்னை நட்சத்திரம்
என்று யார் சொன்னாலும்
நிலா போல தனித்துவமாகு

உனை ஒப்பிட்டவரையும்
ஒப்பிடப்பட்டவரையும்
மறவாதே

ஒப்பிட்டவர் முன்
ஒப்பிடப்பட்டவர்
உனை தலைநிமிர்ந்து
பார்க்க வை

---

# ஆயிரங்கண்ணழகி

மயிலின் நடன நிகழ்வு
வானம் இசையமைக்கிறது
ஒளிப்பதிவும் ஒலிப்பதிவும்
நடைபெறுகிறது வானில்...
ஆயிரங்கண் அழகியின் அற்புத
அசைவிற்கு இன்னும் சில
நிமிடங்களில் ஆசி மழை
பொழியப்போகிறது.

✍ சத்தியமூர்த்தி சதீஸ்குமார்




---

# எல்லாம் முடிந்து விட்டது

வாழ்க்கையின்
ஒரே பிடிப்பாய்
ஒரே ஆதாரமாய்
நீ இருந்தாய்
ஆனால்
நான் கட்டிய அந்தக்
காதல் மாளிகை
கடலுக்குள் மூழ்கிவிட்டது

கண்ணீரின் கடலுக்குள்தான்
யாரோ சொன்னார்கள்

✍ ஜீவன்



காதலித்து கல்யாணம் செய்தால்
கருத்தொருமித்து கடைசிவரை
வாழலாமென்று
பரீட்சித்துப் பார்த்தேன்
காதலிக்க மட்டும்தான் தகுதியென
முத்திரை குத்திவிட்டாய்
வேடிக்கைதான்
எனக்குத் தோல்வியென்றால்
உனக்கு மட்டும் வெற்றியாகிவிடுமா?
சரி சரி

பைத்தியம்போல் உளறுகிறேன்
வார்த்தைகள் தடுமாறுகின்றன
வாதங்கள் இங்கே வாடுகின்றன
என்னுடைய தனித்துவம்
உடைந்து  உருகுலைந்து போனது

உடைந்துபோன சிலையை
செப்பனிட நினைத்து – மேலும்
குரூரமாகிக் கொண்டிருக்கிறேன்
இனிமேல் என்ன இருக்கிறது?
எல்லாம் முடிந்து விட்டது.

---

# நீயே என் காதல்

உன் கண்கள்
ஏனோ என்னோடு
கதை பேசுகிறது

மொழியின்
மௌனம்  நீயே
உருவமாய் கண்டேன்

உனை பார்த்தாலே
ஏனோ மாற்றம்
என் மீது



நான் கொண்ட
காதல் மாறுமோ
என் நெஞ்சில்.

✍ சாகு

---

# புள்ளிமானும் பாயும் புலியும்

துள்ளித் திரியும் புள்ளிமான்
துள்ளித் துள்ளிப் போனது
கானகத்தில் ஒரு நீர்த்தேக்கம்
புல்லை மேய்ந்த மான் தாகம்
தீர்க்க அங்கு வந்து சேர்ந்தது
கொஞ்சம் நீர் பருக எங்கிருந்தோ




பாய்ந்து வந்த புலி மானை நெருங்க
மருண்ட மான் பயத்தால் துள்ளி
ஓடியது
ஓடிப் பயனில்லை
கவ்விப் பிடித்தது
பாயும் புலி புள்ளிமானின் கழுத்தை
செயல் இழந்த மான் பாவம்

புலிக்கு இப்போது முழு சரணம்...
ஒரே இழுப்பில் மானின் உயிரைக்
குடித்தது புலி
செத்தது மான்
புலி தன் தோளில் வைத்தது
தூக்கிச் சென்றது தன் இருக்கைக்கு

இத்தனையும் தொலைவில்
இருந்து பார்த்தேன்
என் கண்முன்னே இப்போது
இரண்டு உருவங்கள்
அழகே உருவாய் துள்ளித்
திரிந்த புள்ளி மான்
அந்த ராக்கத பாயும் புலி

எண்ணத்தில் ஓடியது ஓர்
சிந்தனை
இந்த கண்குளிரவைத்த
அழகிய மானைப்
படைத்தவனா இந்த கொடூரமான
புலியையும் படைத்தான்
மானுக்கு புல்லை இரையாக
வைத்தவன்
புலிக்கும் ஏன் அதையே வைக்க
மறந்தான்!

✍ வாசுதேவன்

# ஒருநாளைக்கு எத்தனை முறை கிரீன் ரீ குடிக்கலாம்?

கிரீன் ரீ துகள்கள், ஆக்ஸிடைஸ் செய்யப்படாத (ஆக்ஸிஜனுடன் வேதியல் ரீதியாக இணையாத) இலைகளைக் கொண்டு தயாரிக்கப்படுபவை. ரீத்தூள் வகைகளிலேயே அதிகம் பதப்படுத்தப்படாதது என்றால் அது கிரீன் ரீ தான். அதில் பாலிபினால் மற்றும் அதிக அளவிலான ஆன்டிஆக்ஸிடைன்ட்டுகள் நிறைந்துள்ளன. கிரீன் ரீ குடிப்பதால் பல விதங்களில் ஆரோக்கியம் மேம்படுகிறது. அது மூளையின் செல்களைப் பாதுகாக்கிறது. நீரிழிவு நோய் பாதிப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகிறது. அதீத பசி உணர்வைக் கட்டுப்படுத்துகிறது.

கிரீன் ரீயில் உள்ள ஃப்ளேவனாயிட்ஸூக்கு ஆன்டிஏஜிங் தன்மை உண்டு என்பதால் முதுமைத்தோற்றத்தைத் தள்ளிப்போட உதவுகிறது. தவிர, இதிலுள்ள மற்றொரு ஃப்ளேவனாயிடான epicatechin , இரத்த நாளங்களின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துகிறது. இது எடைக் குறைப்புக்கும் உதவி, வளர்சிதை மாற்றச் செயல் சரியாக நடக்கவும் செய்கிறது. ஆற்றலைப் பயன்படுத்தி உடலில் வெப்பத்தை உற்பத்தியாக்கச் செய்வதன் மூலம் பசி உணர்வையும் கட்டுப்படுத்தி, எடை அதிகரிக்காமலும் காக்கிறது.

ஒரு கப் வெந்நீரில் ஃப்ரெஷ்ஷான கிரீன் ரீ பேகை முக்கி, அதன் சாரம் இறங்கியதும் சிறிதளவு தேன் அல்லது வெல்லம் சேர்த்துப் பருகலாம். கிரீன் ரீயின் சுவையை மேலும் அதிகப்படுத்த அதில் சில துளிகள் எலுமிச்சைப்பழச்சாறும், துருவிய இஞ்சியும் சேர்த்து சூடாகப் பருகலாம். கிரீன் ரீயிலும் கஃபைன் இருக்கும். கஃபைன் சேர்த்த பானங்களைப் பருகுவது அந்த நாள் முழுவதும் விழிப்புணர்வுடன் இருக்கச் செய்யும்.



இத்தனை நல்ல பலன்கள் இருந்தாலும் கிரீன் ரீயை அளவுக்கு அதிகமாகக் குடிக்கக் கூடாது. ஒரு நாளைக்கு 3 கப்புகளுக்கு மேல் குடிக்க வேண்டாம். அதையும் காலையில் தொடங்கி, மாலை 4 மணிக்குள் குடித்து முடித்துவிட வேண்டும். அளவுக்கு அதிகமாகக் குடித்தால் உடலில் நீர்வறட்சி ஏற்படும். பால் சேர்க்காத கிரீன் ரீ தானே, அதுவும் தண்ணீருக்கு இணையானதுதானே என நினைத்து தண்ணீருக்குப் பதில் கிரீன் ரீயை குடிக்க வேண்டாம்.

தினமும் காலையில் எழுந்ததும், பிறகு முற்பகலில், அடுத்து மாலை 4 மணிக்குள் குடிப்பது சிறந்தது. சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளவர்கள், கல்லீரல் பாதிப்பு உள்ளவர்கள், இதயநோய் உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனையில்லாமல் கிரீன் ரீ குடிப்பதைத் தவிர்க்க வேண்டும். கஃபைன் சென்சிட்டிவிட்டி உள்ளவர்களும் தவிர்க்க வேண்டும். கர்ப்பிணிகளும் தாய்ப்பால் கொடுப்பவர்களும் ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 2 கப்புகளுக்கு மேல் குடிக்க வேண்டாம். ஆரோக்கியமானது என்பதால் வெறும் கிரீன் ரீயை மட்டுமே குடித்துக் கொண்டிருப்பது உங்களை நோயின்றி வாழச் செய்யாது. ஆரோக்கியமான, நோயற்ற வாழ்க்கைக்கு சரியான உணவுப் பழக்கம், போதுமான தூக்கம், தேவையான அளவு தண்ணீர் குடிப்பது, உடற்பயிற்சி போன்றவையும் அவசியம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். ■

---

# பிரபலங்கள் குடிக்கும் ஹிமாலயனில் என்ன ஸ்பெஷல்?

பிரபலங்கள், ஆரோக்கியத்தின் பேரில் அதீத அக்கறை கொண்டவர்கள் மத்தியில் சமீப காலமாகப் பிரபலமாகி வருகிறது ஹிமாலயன் வோட்டர். வழக்கமான தண்ணீரைவிட இது சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஏனெனில், அது சேகரிக்கப்பட்டு, போத்தல்களில் நிரப்பப்படுவதற்கு முன்பாக, இமயமலை மணல், பிளவு மற்றும் பாறைகளின் அடுக்குகள் வழியாக பல ஆண்டுகள் பயணிக்கிறது. அந்த நீரில் மெக்னீசியம், சோடியம், கல்சியம், பைகார்பனேட் போன்ற இயற்கை தாதுக்கள் நிறைந்துள்ளன. தவிர ஹிமாலயன் வோட்டரின் சுவை, வழக்கமான நீரைவிட சிறந்ததாக இருப்பதாக நம்பப்படுகிறது. அமில-காரத்தன்மையின் சமநிலையை பி.ஹெச் என்ற அளவீட்டால் குறிப்பிடுவோம். ஹிமாலயன் வோட்டரின் பி.ஹெச் பேலன்ஸ் 7.1 முதல் 7.7 வரை உள்ளது. அதாவது மைல்டான காரத்தன்மை கொண்டது.

காரத்தன்மை கொண்ட நீர் ஆரோக்கியத்துக்கு நல்லது என்று சொல்லப்படுகிறது. ஏனெனில், இது இரத்த ஓட்டத்தில் அமிலத்தன்மையை நடுநிலையாக்க உதவி, ஆக்ஸிஜன் அளவை அதிகரிக்கிறது. ஆற்றல் மற்றும் வளர்சிதை மாற்றச் செயல்பாட்டை மேம்படுத்துகிறது. ஹிமாலயன் வோட்டரில் ஆன்டிஏஜிங் தன்மையும் நோய் எதிர்ப்பாற்றலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனாலும் அது குறித்த ஆய்வுகள் இன்னும் நிறைய தேவை. அதன்பிறகுதான் இந்தத் தகவல்களை உறுதியாக ஏற்றுக் கொள்ள முடியும்.

அல்கலைன் என்கிற காரத்தன்மை உள்ள இந்த நீரைப் பருகுவதால் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் கொலஸ்ட்ரால் உள்ளவர்களுக்கு நல்லது என்ற கருத்தும் நிலவுகிறது. வேர்க் அவுட் செய்த பிறகு அல்கலைன் தண்ணீரைக் குடிப்பது வழக்கமான தண்ணீர் குடிப்பதைவிட 3 சதவிகிதம் உடலில் இரத்த ஓட்டம் அதிகரிக்க உதவுகிறது என்று




மற்றோர் ஆய்வு சொல்கிறது.

தண்ணீரை காசு கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் பலரும். அப்படியிருக்கையில் ஹிமாலயன் வோட்டரின் அதிகபடியான விலை ஏற்புடையதாக இருக்காது. சாமானியர்களுக்கு அவ்வளவு விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்துவது சாத்தியமில்லை. இத்தனை நல்ல தன்மைகள் கொண்ட ஹிமாலயன் வோட்டர், பிளாஸ்ரிக் போத்தல்களில்தான் நிரப்பப்பட்டு விற்பனைக்கு வருகிறது. பிளாஸ்ரிக் கெடுதல் என பிரச்சாரம் செய்கிறோம். அதிலுள்ள இரசாயனங்கள், நாளமில்லா சுரப்பிகளின் செயல்பாட்டை பாதித்து நோய் எதிர்ப்புத்திறனையும் மட்டுப்படுத்தக்கூடியவை.

பொதுவாகவே பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களில் phthalates எனப்படும் இரசாயனம் இருப்பதால், அவற்றின் நீண்டகால உபயோகம், ஆண்களுக்கு கல்லீரல் புற்றுநோய் மற்றும் விந்தணுக்களின் எண்ணிக்கை குறைதல் போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். அதைக் கருத்தில் கொண்டு தண்ணீரை கண்ணாடிப் போத்தல்களில் விற்பனை செய்வதுதான் ஆரோக்கியமானதாக இருக்கும். ஹிமாலயன் வாட்டருக்கும் அதுவே பொருந்தும். உடலில் நீர் வறட்சி ஏற்படாதபடி போதுமான அளவு தண்ணீர் குடிப்பது ஆரோக்கியமானது. அதற்கு இப்படிப்பட்ட காஸ்ட்லியான தண்ணீர்தான் குடிக்க வேண்டும் என்றில்லை. காய்ச்சி, வடி கட்டி, ஆறவைத்த சுத்தமான தண்ணீரே ஆரோக்கியமானதுதான். ■

# மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பில் நனவாகி வரும் விளையாட்டு மைதானம்



இராஜேந்திரம் ரக்ஸன்

இளைஞர்களை சரியான பாதையில் அழைத்துச் செல்வதில் விளையாட்டு முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. சக்தி விளையாட்டுக் கழகத்தில் சிறந்த வீரர்கள் பலர் உள்ளனர். ஆனால், சொந்தமான விளையாட்டு மைதானம் இல்லாமையினால் அவர்கள் மிகவும் சிரமப்பட்டனர். விளையாட்டு மைதானம் ஒன்று தேவை என்ற கனவு இப்போது நிறைவேறுகிறது.

அரசாங்கத்தினால் 3.5 ஏக்கர் நிலம் மைதானத்திற்காக வழங்கப்பட்டது. இருந்தும் அனுசரனையாளர்கள் இல்லாத காரணத்தினால் நிலத்தைச் சீராக்கும் பணிகள்





தாமதமடைந்து வந்தது. இளைஞர்களின் முயற்சியினால் மரங்களை அகற்றும் பணிகள் நடைபெற்றன.

பின்னர் கனடாவில் இருக்கும் ஒரு அன்பரினதும் தந்தியன் சிதம்பரப்பிள்ளை ஐயா (பிதாலக்சுமி அறக்கட்டளை) மற்றும் கிங்ஸ்லி தியாகராஜா ஐயா ஆகியோரின் உதவியினால் நிலத்தில் எஞ்சியிருந்த மரக்கட்டைகளை JCB வாகனத்தினூடாக அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது. கிரிக்கெட் பிட்ச் ஒன்றை வடிவமைக்கும் பணியும் விளையாட்டு சீருடைகள் வாங்குதலும் சாத்தியமாகியது.

இதன் பயனாக நான்கு அணிகள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி வெற்றிகரமாக நடைபெற்றது. ஆனால், ஒரு தரமான விளையாட்டு மைதானமாக உருவாகி வருவதற்கு உழைப்பும் ஆதரவும் தேவையாக இருக்கிறது.

ஒரு மைதானத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மட்டுமே இதுவரை நடைபெற்றுள்ளது.

இந்த மைதானத்தை புனரமைக்க கிறவல் மண்பரவி, புற்தரையாக்க வேண்டிய தேவை உள்ளது.

மேலும் மலசலகூட வசதி, தண்ணீர் வசதியும் தேவைப்படுகிறது. இந்த மைதானம் முழுமை பெறும் போது கிரிக்கெட், கால்பந்து, எல்லே, கரப்பந்து, டென்னிஸ் போன்ற வெளியரங்க விளையாட்டுகளுக்கான பயிற்சிகளையும் போட்டிகளையும் நடத்த முடியும்.

சக்தி விளையாட்டுக் கழகத்திற்கு அரசினால் வழங்கப்பட்ட பெறுமதிமிக்க உடற்பயிற்சி (Gym) உபகரணங்கள், சொந்த இடம் இல்லாமையினால், நிரந்தரமற்ற இடங்களில் வைத்தே பாவிக்கப்படுகிறது. கழகத்துக்கென ஒரு உள்ளரங்கம் இதே மைதானத்தில் அமையும் பட்சத்தில், இதற்கொரு தீர்வு கிடைக்கும்.

அதேவேளை பல உள்ளரங்க விளையாடுகளான பட்மின்டன், ரேபிள் டென்னிஸ் போன்றவையும் ஆரம்பிக்க முடியும்.



இதற்கான உதவியை அரசோ அல்லது உள்ளூர் மற்றும் புலம்பெயர் உறவுகளோ ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டும் என ஆறுமுகத்தான் குடியிருப்பில் வாழும் விளையாட்டில் ஆர்வமுள்ள இளைஞர்கள் எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றனர்.

இதன் பயனாக நான்கு அணிகள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி வெற்றிகரமாக நடைபெற்றது.

ஆனால், ஒரு தரமான விளையாட்டு மைதானமாக உருவாகி வருவதற்கு உழைப்பும் ஆதரவும் தேவையாக இருக்கிறது. ■

# ரணில் சீனாவுக்கு...

**(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

பலதரப்பு நிதியளிப்பவர்கள் உட்பட இலங்கைக்கான அனைத்து கடன் வழங்குநர்களும் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும் என்று சீனா எதிர்பார்க்கிறது. கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் கடன் வழங்குநர்கள் ஏன் இணைய முடியாது? என்ற கேள்வியையும் சீனா முன்வைத்திருக்கிறது.

ஆனால், சீனாவைக் கடந்து மேற்கு மற்றும் ஐரோப்பியக் கடன் வழங்குநர்களிடம் இலங்கை வர வேண்டும் என்ற அழுத்தங்கள் கடந்த சில வாரங்களாக அதிகரித்துள்ளதையே அவதானிக்க முடிகிறது. ரணில் கடும் அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் வழக்குத் தொடுத்தமை என்பது பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே என ஹர்சா டி சில்வா கூறுகிறார். குறிப்பாக, வங்கிகளில் வட்டி வீதங்கள் குறைக்கப்படுவதால் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் பாதிக்கப்படுவார் என்ற வாதத்தை அவர் முன்வைத்திருக்கிறார்.

ஆகவே, மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளாக இருக்கலாம் அல்லது இந்தியா சீனாவாக இருக்கலாம் இலங்கைக்குக் கடன் கொடுத்து மீள முடியாத நிலைமைக்குள் கொண்டு செல்கின்றனர் என்பதை மறுக்க முடியாது.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் வங்கிகளில் வட்டி வீதக் குறைப்பும் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட சகல சேவைகளுக்குமான வரி அதிகரிப்புகளும் பொது மக்களுக்குப் பாரிய ஆபத்து.

ஆனால், இலங்கைத்தீவின் வருமானத்தை அதிகரிப்பதற்கான மாற்றுத் திட்டங்கள் அரசாங்கத்திடமோ எதிர்க்கட்சிகளிடமோ இல்லை. வரி அதிகரிப்புகளைத் தவிர்த்து இலங்கைத்தீவின் வருமானத்தை அதிகரிக்க இனப் பிரச்சினை முதலில் தீர்க்கப்பட வேண்டும்.

நல்லிணக்கம் ஊடாகவே பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று ஐ.எம்.எப் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் அவ்வப்போது பரிந்துரைத்தபோதும், அதனை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும் என்ற மன நிலை சிங்கள அரசியல் தலைவர்கள் எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. இதனைப் பகிரங்கப்படுத்தச் சிங்கள ஆங்கில ஊடகங்களும் தயாராக இல்லை என்பதுதான் வேதனை. ■

# நெல்லியடியில் IELTS வகுப்புகள்

NORTH POINT
INTERNATIONAL ACADEMY

## IELTS

Achieve a High IELTS Score and Unlock Scholarship Opportunities

FLXIBLE TIME
- PHYSICAL CLASS
- ONLINE CLASS



FIND YOUR DREAM UNIVERSITY
RAISE YOUR LIFE STYLE.

FOR THE 1ST
**100 STUDENTS**
Special Discount

ACADEMIC &
GENERAL TRAINING

# CALL - 077 168 68 95

# ஒரே ஒரு சதம் மூலமாக இத்தனை சாதனைகளா?

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது டெல்லியில் ஆப்கானிஸ்தான் அணியை எதிர்த்து இந்திய அணி விளையாடியது. இதில் முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 273 ஓட்டங்களை இந்திய அணிக்கு இலக்காக நிர்ணயித்தது. இந்தியா எட்டு விக்கெற்களால் வெற்றி பெற்றது. இதையடுத்து, இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு கப்டன் ரோகித்சர்மா அதிரடியான தொடக்கம் தந்தார்.

கடந்த போட்டியில் டக் அவுட்டாகிய ரோகித் சர்மா இந்தப் போட்டியில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தொடக்கம் முதலே பவுண்டரி, சிக்ஸர் என்று விளாசிய கப்டன் ரோகித்சர்மா 63 பந்துகளில் சதம் விளாசினார். இந்த ஒரு போட்டியில் மட்டும் ரோகித்சர்மா பல சாதனைகளைப் படைத்துள்ளார்.

அந்த சாதனைகளின் பட்டியலை கீழே காணலாம்.

**சாதனைகள்:**

சர்வதேச போட்டிகளில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் (கிறிஸ் கெயிலின் 553 சிக்ஸர்கள் சாதனையை இந்தப் போட்டியில் முறியடித்தார்).

ஒருநாள் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் அதிக சதங்கள் விளாசிய சச்சின் டெண்டுல்கரின் (6) சாதனையை முறியடித்தார். இந்தப் போட்டியில் சதம் அடித்ததன் மூலம் உலகக் கிண்ணத்தில் அதிக சதம் (7) விளாசிய வீரர் என்ற சாதனையை படைத்தார்.

ஒருநாள் உலகக்கிண்ணத்தில் அதிவேகமாக சதம் விளாசிய இந்தியர் என்ற சாதனையை ரோகித் சர்மா படைத்துள்ளார். அவர் 63 பந்துகளில் சதம் விளாசி அசத்தியுள்ளார். ஒருநாள் உலகக்கிண்ணத்தில் அதிவேகமாக 1000 ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.



இந்தப் போட்டி மூலம் பல சாதனைகளைப் படைத்த கப்டன் ரோகித்சர்மாவிற்கு இது 31 ஆவது சதம் ஆகும். அவர் 253 ஒருநாள் போட்டிகளில் ஆடி 31 சதங்கள், 3 இரட்டை சதம், 52 அரை சதம் விளாசியுள்ளார். சிறப்பாக ஆடி வந்த ரோகித் சர்மா 84 பந்துகளில் 16 பவுண்டரி 5 சிக்ஸருடன் 131 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

30 பந்துகளில் 50 ஓட்டங்களைக் கடந்து அதிரடியாக விளையாடினார். நேரம் செல்லச் செல்ல கொஞ்சம்கூட அதிரடியைக் குறைக்காமல் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் பவுலர்களை வெளுத்து வாங்கிய அவர் வெறும் 63 பந்துகளில் 100 ஓட்டங்கள் கடந்தார். இதன்வாயிலாக உலகக் கோப்பை வரலாற்றில் அதிவேகமாக சதமடித்த இந்திய வீரர் என்ற ஜாம்பவான் கபில் தேவ் 40 வருட ஆல் டைம் சாதனையைத் தகர்த்த ரோகித்சர்மா புதிய சரித்திரச் சாதனை படைத்தார்.

இதற்குமுன் கடந்த 1983 உலகக்கிண்ணப் போட்டியில் சிம்பாவே அணிக்கு எதிராக கபில் தேவ் 72 பந்துகளில் 100 ஓட்டங்கள் அடித்ததே இதுநாள் வரை சாதனையாக இருந்தது.

கடந்த 2015 உலகக்கிண்ணப் போட்டியில் ஒரு சதமடித்த ரோகித் 2019 உலகக் கிண்ணத்தில் 5 சதங்கள் அடித்தார். இந்த சதத்தையும் சேர்த்து மொத்தம் 7 சதங்கள் அடித்துள்ள ரோகித்சர்மா உலகக் கோப்பை வரலாற்றில் அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற மாபெரும் சரித்திர உலக சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் 1992-2011 காலகட்டங்களில் 6 சதங்கள் அடித்ததே முந்தைய சாதனையாகும். ஜாம்பவான்கள் சச்சின், கிறிஸ் கெயில் சாதனையைத் தகர்த்த ஹிட் மேன் ரோஹித் 2 சரித்திர சரவெடி உலக சாதனை இது போக ஒட்டுமொத்த சர்வதேச கிரிக்கெட்டில் அதிக சிக்ஸர்கள் (555*) அடித்த வீரர் என்ற கிறிஸ்கெயில் (553) உலக சாதனை உடைத்த அவர் உலகக் கோப்பையில் வேகமாக 1000 ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற உலக சாதனையும் படைத்தார். ■

# மூன்று கண்டங்களில் நூற்றாண்டுக் கொண்டாட்டம்

ஒலிம்பிக் போட்டிக்குப் பின் அதிகமானோர் கண்டு களிக்கும் போட்டியாக உலகக் கிண்ண உதைபந்தாட்டத் திருவிழா விளங்குகிறது. 4 ஆண்டுகளுக்கொரு முறை நடத்தப்படும் இப் போட்டியில் விளையாடுவதை ஒவ்வொரு நாடும் எப்படி கௌரவமாக பார்க்கிறதோ அதற்கும் ஒரு படி மேல் தொடரை நடத்த போட்டா போட்டி நிலவும். இப்படிப்பட்ட சூழலில் ஒரு போட்டியை 6 நாடுகள் இணைந்து நடத்துவதற்கான வாய்ப்பை வழங்கி வியக்க வைத்துள்ளது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம்.

இந்நிலையில், 23 ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் 2026 ஆம் ஆண்டு அமெரிக்கா, மெக்ஸிக்கோ, கனடா ஆகிய 3 நாடுகள் இணைந்து நடத்துகின்றன.

இதையடுத்து, 2030 ஆம் ஆண்டுப் போட்டியை ஐரோப்பியக் கண்டத்தைச் சேர்ந்த ஸ்பெயின், போத்துக்கல் ஆபிரிக்க கண்டத்திலுள்ள மொராக்கோ ஆகிய 3 நாடுகள் மட்டும் இணைந்து நடத்த முதலில் முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில், உலகக் கோப்பை கால்பந்து கிண்ண உதைபந்தாட்டத் தொடர் அரங்கேறி நூற்றாண்டு ஆவதை முன்னிட்டு, அதை விமர்சையாகக் கொண்டாடும் நோக்கில் மேலும் தென்னமெரிக்க நாடுகளான ஆர்ஜென்ரீனா, உருகுவே, பராகுவே ஆகிய அணிகளும் இணைந்து போட்டியை நடத்தவுள்ளன.

உதைபந்தாட்ட வரலாற்றில் முதன் முறையாக 3 கண்டங்களைச் சேர்ந்த அணிகள் உலகக்கிண்ணப் போட்டியை நடத்தவுள்ளன. இதன் மூலம் இந்த 6 அணிகளும் உலகக் கிண்ண பிரதான சுற்றுக்கு நேரடியாக தகுதி பெறும்.

எஞ்சிய 42 அணிகள் தகுதிச் சுற்று மூலம் தேர்வு செய்யப்படும் என்று பிஃபா தெரிவித்துள்ளது.



அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் 2030 உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர் நடத்தப்படவுள்ளது. ■

# லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட்

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 2028 ஆம் ஆண்டு நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் சேர்க்கப்படும் எனத் தகவல் வெளியாகி உள்ளது.




கிரிக்கெட், பேஸ்பால், ஃபிளாக் ஃபுட்பால், லுக்ராஸ், ஸ்குவாஷ் ஆகிய விளையாட்டுகளைச் சேர்க்கப் பரிந்துரைத்திருப்பதாக லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் ஏற்பாட்டாளர்கள் குழு அறிக்கை ஒன்றில் உறுதி செய்துள்ளது.

இந்த வார இறுதியில் மும்பையில் நடக்கும் ஒலிம்பிக் கமிட்டிக் கூட்டத்தில் இதுகுறித்து உறுதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் இடம்பெறவிருக்கும் விளையாட்டுகளுக்கான முதல்கட்ட பட்டியல் கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது.

அதில் 28 விளையாட்டுகள் இறுதி செய்யப்பட்டிருந்தன. அந்தப் பட்டியலில் கிரிக்கெட் இல்லை. கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டிய விளையாட்டுகள் என்ற பட்டியலில் கிரிக்கெட் இடம்பெற்றிருந்தது. இப்போது லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளின் ஏற்பாட்டாளர்களும் பரிந்துரை செய்திருப்பதால் கிரிக்கெட் சேர்க்கப்படுவது கிட்டத்தட்ட உறுதியாகி இருக்கிறது.

ஒலிம்பிக்கில், ரி20 தொடராக இந்தப் போட்டிகளை நடத்தலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறது ஐ.சி.சி.

தரவரிசையில் முதல் ஆறு இடத்திலிருக்கும் அணிகளை அதில் பங்கேற்க வைக்கலாம் எனவும் தெரிவித்திருக்கிறது.

குரூப்கள் பிரித்து நடத்தப்படுமா? ரவுண்டு ராபின் முறையில் நடத்தப்படுமா? என இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

1900 ஆம் ஆண்டு பாரிஸில் ஒலிம்பிக்கில் பிரிட்டன், பிரான்ஸ் என மொத்தமே இரண்டு அணிகள் தான் பங்கேற்றன.

டெஸ்ட் போட்டியாக நடத்தப்பட்ட அந்தப் போட்டியில் பிரிட்டன் தங்கத்தையும் பிரான்ஸ் வெள்ளியையும் வென்றன.

இப்போது 128 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சேர்க்கப்படவுள்ளது. ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 14.10.2023 அன்று வெளியிடப்பட்டது.